# மதிவாணர்

## பணி ஓய்வு மணிமாலை



இரா.இளங்குமரனார்

# மதிவாணர்
# பணி ஓய்வு மணிமாலை

முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

**திருவள்ளுவர் நிலையம்**

7, இராமன் தெரு, திருநகர்


மதுரை - 625 006.

# நூற்குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | மதிவாணர் பணி ஓய்வு மணிமாலை |
| ஆசிரியர் | இரா. இளங்குமரன் |
| மொழி | தமிழ் |
| பதிப்பு | முதற்பதிப்பு - மே 2016 |
| பக்கம் | (xxviii) + 56 = 84 |
| எழுத்து | 12 புள்ளி |
| தாள் | 18.6 வெள்ளை மேப்லித்தோ |
| அளவு | 1/8 |
| படிகள் | 2000 |
| விலை | இலவய நூல் |
| உரிமை | ஆசிரியர்க்கு |
| வெளியீடு | திருவள்ளுவர் நிலையம்<br>7, இராமன் தெரு,<br>திருநகர், மதுரை - 625 006. |
| நூலாக்கம் | "தி பிரிண்டிங் அவுசு"<br>திருச்சி - 23 |

நூல் கிடைக்குமிடம் :

- **திருவள்ளுவர் நிலையம்**
  7, இராமன் தெரு, திருநகர்,
  மதுரை - 625 006.



எனது பணிநிறைவுப் பாராட்டு விழாவிற்கு வந்து வாழ்த்தியமைக்கு மனமார்ந்த நன்றியை எனது சார்பாகவும், எனது குடும்பத்தினர்கள் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


**நன்றி ! நன்றி !! நன்றி !!!**

இவண்

**இரா. மதிவாணன்,** B.Sc.,

**இடம்** : சிதம்பர மஹால், திருச்சி

**நாள்** : 19.06.2016




**S.T. ராமசாமி ரெட்டியார்**

இயற்கை எய்திய நாள் : 19.06.1991

## படையல்

பதிவா வணமாய்ப் பணிசெய் தோன்றல்
மதிவா ணனாரின் பணிநிறை கொடையாய்
கற்பார் நலம்பெற நிற்பா ராகப்
பொற்பார் மணிமலர் ஆக்கி, அதனை
அரும்பெறல் தந்தை இராம சாமியார்
பெரும்புகழ் நினைநாள் இருபத் தைந்தில்
படையலாய் வழங்கும் பண்பியல்,
நடைமுறை யாகின் நலம்பல வாமே!



**ஆ. மணிவண்ணன்**
மேனாள் மாவட்டச் செயலாளர்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

## பதிப்புரை

பிறருக்காகப் போராடும்
பேருள்ளம் கொண்டவர்
முன்னேற்றச் சங்கத்தின்
முழுமையான பொதுச் செயலாளர்
திருச்சி மாவட்டத் தலைவர்
மதிவாணன் பணிநிறைவு நாள்
நினைக்கும் நாளாய் நிலைக்க
எண்ணி யெண்ணிப் பார்த்தோம்.
புதிது புதிதாய்ச் சிந்தித்தோம்.

விலைமதியாப் பத்துப் பொருள்களுடன்
வீட்டிற்கொரு பெட்டகமாய் வாய்த்ததுதான்
உங்கள் கைகளில் தவழும்
ஒப்பரிய நூல்.

இலக்கியச் செம்மல் தமிழறிஞர்
அய்யா இளங்குமரனார் அவர்களை
மதியோடு மலையும் நானும்
மதுரைக்குச் சென்று பார்த்தோம்.

வேண்டுகோள் விடுத்தோம்; நமக்கு
வேண்டும் பொருள்களுடன் நூலொன்று
ஆக்கித்தர அய்யாவிடம் வேண்டினோம்!
ஆயிரக்கணக்கான பக்கங்கள் எழுதும் பணியில்
ஆழ்ந்திருக்கும் வேளையிலும்
அரியதொரு நூல்செய்து கொடுத்தார்!
பெறற்கரிய பேற்றை மதிவாணன்
பெற்றார் என்பதே உண்மை.
படிக்கப் படிக்கத் திகட்டாமல்

பத்துப் பொருள்களை உள்ளடக்கி
தேவையறிந்து கொடுத்திருக்கிறார்.
முன்னை ஊராட்சி முறை
முன்னூறு முறை படித்தாலும் தகும்.
மூளையில் பதிந்தால்
தொன்னையுள்ளம் மாறும்.
அழகுற நூலை வடிவமைத்து
அச்சுப்பிழை திருத்தி
அச்சகப் பொறுப்பேற்று
நூலாக்கித் தந்த மதிப்பியல் பேராசிரியர்
தமிழகன் அய்யா அவர்களுக்கும்
அச்சகத்தார்க்கும் நன்றி! நன்றி!

**ஆ. மணிவண்ணன்**
மேனாள் மாவட்டச் செயலாளர்



**V.P. சக்கரையப்பன்,** B.A.,
முன்னாள் மாநிலத் தலைவர்
தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர்கள் சங்கம்
விருமாண்டம் பாளையம் (அஞ்சல்)
செங்கப்பள்ளி (வழி), திருப்பூர் மாவட்டம்.


**மாநிலப் பொதுச் செயலாளர் திருமிகு இரா. மதிவாணன்**
**அவர்களின் பணி நிறைவுப் பாராட்டு விழா**

## வாழ்த்துச் செய்தி

பசுமை நிறைந்த நினைவுகளே !

சங்கம் துவங்கிய நன்னாளில் இருந்து படிப்படியாக முறைப்படி முன்னேறி இன்று இப்பேரியக்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளராகப் பணி நிறைவு பெறும் தங்களுக்கு என் நெஞ்சம் நிறை நல்வாழ்த்துக்கள். ஆரம்ப காலத்தில் சங்க வளர்ச்சியில் தங்களின் பங்களிப்பு போற்றதலுக்குரியது. மாநிலத் தலைமையின்பால் தாங்கள் கொண்டிருந்த மாசற்ற பாசமும் குறைவற்ற நேசமும் என்றென்றும் நினைவு கூரத்தக்கதே. மாவட்டப் பிரச்சனையில் மாநிலத்தலைமை நல்முடிவெடுக்க தாங்கள் உறுதுணையாக நின்றீர்கள். இக்கட்டான நேரங்களில் சங்க ஒற்றுமைக்கு ஊறு விளைந்திடக் கூடாது விரிசல் உண்டாகிவிடக் கூடாது என எங்களுக்கு உறுதுணையாகத் தலைமைத் தளபதியாகச் செயல்பட்டு தாங்கள் ஆற்றியபணி அளப்பறியது. சொல்லில் வேகமும் செயலில் விவேகமும் நிறைந்த தங்களின் பணி நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும் எனக் கூறிவாழ்த்துகிறேன். நீவீர் நீள் ஆயுள் நிறைசெல்வம் பெற்றுப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ என் நெஞ்சம் நிறை வாழ்த்துக்கள்.

என்றென்றும் உங்கள்



**V.P. சக்கரையப்பன்**
முன்னாள் மாநிலத் தலைவர்



கவிமாமணி. **துரை. இராசமாணிக்கம்,** B.Sc.,
மேனாள் மாநிலத் தலைவர்
த.நா.கி.நி.அ.முன்னேற்ற சங்கம்

## பணிநிறைவு வாழ்த்து மடல்

உறுதிமிக்க கொள்கைகளின் தலைவர் பலர்
உருக்கொண்ட இலால்குடி வட்டத்தினில்
கெருடமங்கலம், பெருநிலக்கிழார் திருவாளர்
இராமசாமி ரெட்டியார் – சரஸ்வதிக்கும்
சீர் மிகு மூத்த மகனாகப் பிறந்திட்டீர்....!
சிறப்புறவே மதிவாணன் பெயருமிட்டார்...!

கல்லூரியில் இளம்கலையில் பட்டம் பெற்றீர்...!
கருத்தூன்றி அனைத்திலும் முதன்மையுற்றீர்
மக்களுக்கு சேவையாற்றும் அரசுப்பணியாய்
மலர்ந்திட்ட கிராமநிருவாக அலுவலராய்
தேர்வாணையம் தேர்வுவழி பொறுப்பேற்றீர்...!
திறமையொடு வழிகாட்டும் தலைமையேற்றீர்..!

அச்சுறுத்தல், அடக்குமுறை, அதிகாரமீறல்
அந்நாளில் நிலவிய கொத்தடிமை
எடுத்ததெற்கெலாம் குற்றச்சாட்டு, பணிநீக்கம்
எவருக்கென பாராது போராடி
உறுதுயரம் களைந்தீர் துணை நின்றீர்
உம்மாலே பலன்கண்டார் பலருண்டு...!

குடகுமலை தோன்றிடினும் குதித்தோடி
குதூகலமாய் தமிழ்நிலத்தில் கால்பதித்து
கொள்ளிடமாய் காவிரியாள் பெருக்கெடுக்க
கல்லணையைக் கட்டிவைத்த கரிகாலன்
மலைக்கோட்டை திருச்சியெனில் மனம்நில்லும்
நிலைதிரியா நீர்த்திடாத போராளி நீர்...!

முன்னேற்றச் சங்கத்தின் பொதுச் செயலாளராய்
முறையாக வாக்களிப்பில் வெற்றிபெற்றீர்...!
தரஊதியம், பதவிஉயர்வு, கருணைப்பணி
தேர்தல்படி, பணிவரன்முறை, மாவட்டமாறுதல்
அத்தனையும் பெற்றிட்டதில் முனைப்போடு
முத்திரையைப் பதித்திட்டீர் மறவோமே...!

இல்லறமும் நல்லறமாய் அமையப் பெற்றீர்
இணைந்திட்டார் கவின்நிலவாய் கஸ்தூரியும்
மகேஷ்குமார், ரஞ்சித்குமார், சுவேதாவும்
முக்கனியாய் மூவர்நின் வாரிசானர்...!
பொறியாளர் பணிபெற்றும் உயர்ந்திட்டார்
பூத்திட்டும் மகழ்ச்சியென்றும் வாழ்க நீவிர்..!

கவிமாமணி. **துரை. இராசமாணிக்கம்**
மேனாள் மாநிலத் தலைவர்



**நா. பழனிசாமி,** B.Sc., LLB.
வழக்கறிஞர்
மாநிலத் தலைவர்,
த.நா.ஓ.கி.நி.அ. நலச்சங்கம், மாநில மையம்,
தாராபுரம்.

**பாசமிகு சகோதரர் மாநிலப் பொதுச் செயலாளர்**
**திருமிகு இரா. மதிவாணன் அவர்களின் பணிநிறைவுப் பாராட்டு விழா**

## வாழ்த்து மடல்

1984-ம் ஆண்டு கிராம நிருவாக அலுவலராகப் பணியில் சேர்ந்து அன்று முதல் இன்று வரை சங்கப்பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வட்டத் தலைவராக, மாவட்டத் தலைவராக, மாநிலப் பொதுச் செயலாளராகத் தொடர்ந்து பணியாற்றி 31.05.2016-ல் ஓய்வுபெறும் பாசத்திற்குரிய சகோதரர் மாநிலப் பொதுச் செயலாளர் இரா. மதிவாணன் அவர்கள் ஆற்றல்மிகு செயல் வீரர், அப்பழுக்கற்ற அன்பின் திருவுருவம் அவர் சங்கப் பொது வாழ்வில் கடைப்பிடித்த நெறிமுறைகளை நல்ல பாடமாகவும், வழிகாட்டியாகவும் எதிர்கால இளைய சமூகத்தினர் கடைப்பிடிக்க வேண்டும்.

நீருக்குள் செல்லாமல் நீச்சல் கற்கமுடியாது. அதுபோல போராட்டங்கள் செய்யாமல் கோரிக்கைகளைப் பெற முடியாது என்ற கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ள மாவீரன். கிராம நிருவாக அலுவலர்கள் பணி அமைப்பை மாற்ற முற்பட்டபோது திருச்சி மாநகரில் மிகப்பெரிய ஆணை எரிப்புப் போராட்டத்தை நடத்தி கிராம நிருவாக அலுவலர்கள் என்ற பெயர், தொடர்ந்து இன்று வரை இருப்பதற்கு பெரிதும் உதவியவர் மாநிலப் பொதுச் செயலாளர் இரா. மதிவாணன் ஆவார்கள்.

சங்கத்தின் பொதுக் கோரிக்கையானாலும், தனி நபர் பிரச்சனையானாலும் உடனுக்குடன் நேரில் சென்று உறுப்பினர் நலன் காப்பதில் அவருக்கு நிகர் அவரே.

சங்கங்கள் பிளவுபட்டபோதும், ஒருங்கிணைந்த போதும் எனது சங்க வாழ்வில் தோளோடு தோள் கொடுத்து எனக்கு உயிருக்கு உயிராய் உறுதுணையாய் நின்று சங்க நலன், உறுப்பினர் நலம் காத்த நிகழ்வுகளை நான் வாழ்நாளில் என்றென்றும் மறந்திடேன்.

புதிய கிராம நிருவாக அலுவலர்கள் பொறுப்பேற்றவுடன் பிரிந்துள்ள சங்கங்கள் ஒருங்கிணைய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தபோது, பதவிக்காகப் போட்டி போடும் இக்காலக்கட்டத்தில் உறுப்பினர்களின் நலன் காப்பதற்காகத் தான் வகித்து வரும் மாநிலப் பொதுச் செயலாளர் பதவியையும் துறப்பதற்குத் தயார் என்று அறிவிப்புக் கொடுத்த செயல் நெஞ்சாரப் பாராட்டுக்குரியது. கிராம நிருவாக அலுவலர்கள் சமுதாயம் என்றும் எண்ணிப் பார்க்க வேண்டும். சங்க வரலாற்றில் ஒரு மைல் கல்லாகப் பதியப்பட வேண்டும்.

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழலல்லால்
பொன்றாது நிற்பது ஒன்றுஇல்

(உயர்ந்த புகழ் அல்லாமல் உலகத்தில் ஒப்பற்ற ஒரு பொருளாக அழியாமல் நிலை நிற்கவல்லது வேறொன்றும் இல்லை) என்ற வள்ளுவன் குறளுக்கேற்ப சங்க வரலாற்றில் உயர்ந்த புகழைப் பெற்றுள்ள பணி நிறைவு விழாக்காணும் என தருமைச் சகோதரன் மாநிலப் பொதுச் செயலாளர் இரா. மதிவாணன் அவர்கள்

பாமேவு பாவலர் பண்கொண்டு பாராட்டப்
பாரில் நல்லறங்கள் செய்து
பகரரிய மெய்க்கீர்த்தி பலபெற்று நலம்பெற்று
பரமனருள் பார்வை பெற்று
நீ மேவு மிடமெலாம் புகழ்மேவ பொருள்மேவ
நீவிரும், துணைவியாரும், நன்மக்கட்பேறும், உற்றார்
உறவினரும்
பல்லாண்டு! பல்லாண்டு! வாழ்க! வாழ்க என
நெஞ்சினிக்க வாழ்த்துகிறேன்.

நா. பழனிசாமி
**நா. பழனிசாமி**
மேனாள் மாநிலத் தலைவர்



**நா. முருகேசன்**
மேனாள் மாநிலத் தலைவர்
செங்கிப்பட்டி, தஞ்சை மாவட்டம்-613402.

தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர்கள் முன்னேற்றச்
சங்கத்தின் பொதுச் செயலாளரே திருமிகு. மதிவாணரே!
ஒருங்கிணைந்த சங்கத்தின் மாவட்டத் தலைவரே!
மலைக்கோட்டை மாநகர மண்ணின் மைந்தரே!
எதையும் எதிர்கொண்டு, அச்சமில்லை என்று துணிச்சலுடன்
இயக்கத்தை நடத்திவரும் மாவீரரே!
நீவிர் ஆற்றியுள்ள பணிகளோ ஏராளம், தர ஊதியம்,
30 விழுக்காடு பதவி உயர்வு இன்னும் பல கோரிக்கைகளை
இயக்கத்தின் துணையோடு சாதித்துக் காட்டிய சாதனையாளரே!
செயற்கரிய காரியங்களைச் சிறப்பாகச் செய்திட்ட
மனித நேயப் பண்பாளரே!
பாசத்துக்குரிய பண்பாளரே!

கிராம நிருவாக அலுவலர் எனும் அரசுப் பணியில் ஆண்டுகள் 32 பணிபுரிந்து மக்களுக்கு சிறப்புடன் சேவை செய்து மே-திங்கள் 2016-ல் பணி ஓய்வு அரசுப்பணியில் அகவை 58 ஆனதால் பணி ஓய்வு. ஆருயிர் நண்பரே திரு.இரா.மதிவாணரே! தங்கள் செயல்பாடுகள் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும். அறம், பொருள், இன்பம் தழைக்க வேண்டும். புகழோடு சுற்றம் சூழ வாழ்ந்திடவேண்டும்.

தங்களுக்கு என் இதயம் கனிந்த இனிய நல்வாழ்த்துக்கள்!

பாராட்டுக்கள்!

அன்புடன்
**நா. முருகேசன்**
மேனாள் மாநிலத் தலைவர்




## இனிக்கும் இன்ப நினைவுகள்

**மா. சுப்ரமணியன்,** M.A.,
மாநிலத் தலைவர்,
த.நா.கி.நி.அ.முன்னேற்றச் சங்கம்
மற்றும் சென்னை அரசு அலுவலர்
கூட்டுறவுக் கட்டிடச் சங்கம்
மேற்கு தாம்பரம், சென்னை-45.

எத்தனையோ ஆசையுண்டு நமது நெஞ்சில்,
எத்தனையோ ஏக்கமுண்டு நமது வாழ்வில்,
எத்தனையோ எண்ணுகின்றோம்! எண்ணும், எண்ணம்;
எல்லாமேஇனிப்பதில்லை! கசப்பதில்லை!
ஒத்த மனம் கொண்டுவிட்டால்
உவகை அங்கே ஊற்றெடுக்கும்; ஆர்ப்பரிக்கும்;
நினைவெல்லாம் நித்தம் நித்தம் நலம் பயக்கும்!
மாற்றம் இல்லையெனில் மரம் கூடப் பயனற்றுப்போகும் – என்ற
கவிமாமணியின் இலட்சியக் கனவோடு
பதவி உயர்வு எனும் பரிணாமம் பெற
பண்பு சார் பழனிசாமி – அழகர்சாமி பட்டறையில்
பயிற்சிபெற்ற மலைக்கோட்டை மாமணியே மதிவாணரே!
முன்னேற்றச் சங்கத்தில் சங்கமித்து பெரும்பேறு பெற்றுவிட்டாய்!
திண்டுக்கல் தேர்தலிலே வாகை சூடி
திறமுடனே சங்கத்தை இயக்கி வந்தாய்!
வானத்து முழுநிலவு மாதத்தில் மூன்றுநாள் ஓய்வெடுக்கும்!
மதி என்ற மாமணியோ சூரியன்போல் 30 நாளும்
ஓய்வின்றி ஒளிவீசும், உறுப்பினர் நலன் காக்க!
இழைத்தாலே மணம்வீசும் சந்தனம்போல்
உழைத்துழைத்து உச்சிமலை போல் புகழைப் பெற்றவன் நீ!
அடுத்தடுத்து முன்னேறும் அலைகள் போல
முன்னேற்றச் சங்கத்தில் முன் வைத்த கோரிக்கைகள் பல
வென்றெடுத்த சாதனைகளும், பலப்பல
கட்டவிழ்ந்த போர்க்களத்து யானை நீ! உன்றன்
கர்ஜனைகள் முன்னேற்றச் சங்கத்தின் காலப்பெட்டகம்
சத்தமிடும் இடி, அலைகள், அருவி கூடி

சமபந்தி விருந்தளிக்கும் உந்தன் பேச்சு;
நீருக்கும் நெருப்புக்கும் நடுவில், துன்ப
நிகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் இடைநின்று
பேருக்கும் புகழுக்கும் வெறிகொள்ளாது
முன்னேற்றச் சங்கத்தை ஏற்றம் செய்திட்ட
முழுமதியே! மதிவாணரே உன்புகழ் நிலைக்கட்டும்!
நல்லொழுக்கம்! நல் மனையாள் நன்மக்கள்
நற்பேறு பெற்றுவிட்டாய் இப்பூவுலகில்,
ஓய்வு வந்து குரல் கொடுத்து அதன் பணியை நிறைவுசெய்ய
ஓய்வின்றி உழைத்திடுவோம் உதயசூரியன் போல் பிறர் நலம் பேண!
வாழ்க! வெல்க!

என்றும் அன்புடன்



**மா. சுப்ரமணியன்**
மாநிலத் தலைவர்



**சு. சுடலையாண்டி**

மேனாள் மாநிலத் தலைவர்

தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கம்

திருச்சிராப்பள்ளி.

## வாழ்த்துக்கள்

திரு.இரா. மதிவாணன் அவர்கள் 31.05.2016 அன்று பணிஓய்வு பெற்றுள்ளார்.

முகலாயர் காலம் தொட்டு முகிழ்ந்தெடுத்து ஆங்கிலேயர் காலத்திலிருந்து மக்களுக்கு அத்தியாவசியப் பணியாற்றும் துறையாக இன்று வரை இருந்து வரும் துறைகளில் முதன்மையான துறை வருவாய்த்துறை.

இந்தத் துறையின் அடித்தளமாக அமைந்துள்ளது கிராம நிருவாகம். அந்த கிராமநிருவாக அலுவலராக திருச்சி மாவட்டத்தில் 32 ஆண்டுகள் பணிமுடித்து ஓய்வு பெற்றுள்ளார். எனது அன்பிற்கினிய நண்பர் திரு. இரா. மதிவாணன்.

பட்டதாரி என்ற போதிலும் பகட்டு இல்லாத பண்பு மிக்க நிருவாக அலுவலர்.

அரசு ஊழியர்களின் அறப்போராட்டங்கள், சங்கம் சார்ந்த இயக்க நடவடிக்கைகளின் போது சங்க நிருவாகியாக காலத்தாற் ஆற்றிய கடும் பணிகள், காராக்கிரகத்திற்கும் கூட சென்று மீண்ட செயல்பாடுகள், கோரிக்கைகள் வென்றெடுத்த சங்கவாதி, சாதனைகளின் படைப்பாளி இவர் என்பதற்கானச் சான்றாக வருங்காலத்திற்கு வழிகாட்டுதலாக நிச்சயம் அமைந்திடும்.

அரசுப் பணியிலிருந்து அகவை முடிந்தமையால் ஓய்வு பெற்ற பின்னரும் மனைமாட்சி இனமாட்சியுடன் அனைத்து நலன்களும் பெற்று தளராத கீர்த்தியுடன் உங்கள் சமூகப்பணி தொடர்ந்திட எனது உளமார்ந்த வாழ்த்துக்களை இத்தருணத்தில் உரித்தாக்குகிறேன்.

அன்புள்ள,

**சு. சுடலையாண்டி**




**ப. அருள் ஜோஸ்**
மாநிலத் துணைத் தலைவர், TRGEA
திருச்சிராப்பள்ளி.

அன்பான திரு.இரா. மதிவாணன் அவர்களுக்கு,

தங்களது 32 ஆண்டு பணிக்காலத்தில் எத்தனையோ சாதிச்சான்று, வருமானச்சான்று, வாரிசு சான்று வழங்கி, மன நிறைவோடு பணியிலிருந்து ஓய்வுபெறவிருக்கும் தங்களுக்குச் சான்று தேவையில்லை. ஓய்வு பெற்ற பின்னர் சேர்த்து வைக்கும் சொத்து மகிழ்ச்சி மட்டுமே. அந்த மகிழ்ச்சிக்கு ஆதாரம், பொறுமை, தாழ்மை, சகிப்பு, இரக்கம், தர்மம், ஜாதி மத பேதமின்மை ஆகியவை மட்டுமே. இவற்றை மூலதனமாகக் கொண்டு நீடூழி வாழ வாழ்த்துகிறேன்.

**ப. அருள் ஜோஸ்**
மாநிலத் துணைத் தலைவர், TRGEA



**இரா. அழகர்சாமி**
பொதுச் செயலாளர்
த.நா.ஓ.கி.நி.அ. நலச்சங்கம்
கரூர்-5.

சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது - குறள் 647

அன்புத் தம்பி மதிவாணன் அரசுப் பணியை நிறைவு செய்கிறார். மகிழ்ச்சியாய் இருக்கிறது. அரசுப்பணி காரணமாக அதன் இன்னொரு முகமாக நமது சங்கம் விளங்கிக் கொண்டிருக்கிறது.

இரண்டு பணிகளையும் சிறப்பாகச் செய்து முடித்திருக்கிறார். முப்பத்திரண்டு ஆண்டுகள் தொடர்ந்து அரசுப்பணியில் இருப்பது இயல்பான ஒன்றுதான்; வியப்பில்லை; சாதனையில்லை.

பணியேற்ற நாள் முதல் பிறருக்காக அவர்தம் துயர்துடைப்பதற்காக, உரிமையைப் பெறுவதற்காக, சிக்கலைத் தீர்ப்பதற்காக உயர் அலுவலர்களோடு அரசு விதிகளையும், நடைமுறைகளையும் சுட்டிக்காட்டிச் சொற்போர் செய்து உறுப்பினர்களைக் காத்திருக்கிறார். அதுதான் சாதனை.

சோர்வே இல்லாமல் தொடக்கம் முதல் பணி நிறைவு வரை காலம் தாழ்த்தாமல், ஒத்திப்போடாமல் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருவேன் என்று கூப்பாடு போடாமல், உறுப்பினர்களின் துயர்களை நீக்கக் கூப்பிடாமலே செல்லும் குணம் உனக்குண்டு.

அச்சம் என்பது உன் அகராதியில் இல்லையென்றே கருதுகிறேன். பார்த்தறிந்து சொல்கிறேன். போகிற போக்கில் சொல்லும் வெறும் புகழ்ச்சி இல்லை. அதனால் தான் அரசின் உரிமைகள் பல நமக்குக் கிடைத்திருக்கின்றன.

நானும் வட்ட, மாவட்ட, மாநிலப் பொறுப்புகளில் பணியாற்றியுள்ளேன். உன்னைக் கண்டு மலைத்துப் போயிருக்கிறேன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு இனிமையான காலம்.

தம்பி மதிவாணா!
உன்னை நீ தான் வெல்ல முடியும்
உன்னை நீதான் தோற்கடிக்க முடியும்
உன்னால் பலகுடும்பங்களில் விளக்கெரிகிறது.
உன்குடும்பமும் நீயும் நன்றாக இருக்க
இயற்கை துணை நிற்கும்.

அன்புடன்

**இரா. அழகர்சாமி**



**S.இளங்கோவன்**
கி.நி.அ (ஓய்வு)
மேனாள் மாநிலப் பொருளாளர்

மதிப்பிற்குரிய நண்பர் மதிவாணன் அவர்களுக்கு வணக்கம்.

தங்களது ஓயாத உழைப்பால் நமது இயக்கம் வியத்தகு உயர்வு பெற்றுள்ளது என்பதை நினைத்துத் தங்களைப் பாராட்டுகிறேன். மேலும் தாங்கள் பொதுப்பணியில், தங்களது கவனத்தைச் செலுத்தி நமது இயக்கம் மென்மேலும் உயர்வு பெறச் செய்ய வேணுமாய்த் தங்களுக்கு எனது கோரிக்கையினைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவண்,

17/3/16

**S. இளங்கோவன்**



**ந. இராமன்**

மாநில ஆலோசனைக்குழு உறுப்பினர் மற்றும்
மேனாள் மாநிலத் தலைமை நிலையச் செயலாளர்

தமிழகத்தின் ஒரு நாயகமாய் விளங்கக்கூடிய திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் ஒருங்கிணைந்த கிராம நிருவாக அலுவலர்கள் சங்கத்தின் ஆரம்ப காலம் முதல் மாவட்டத் தலைவராகத் தனது சங்கப் பணியைத் துவக்கி பின்பு கிராம நிருவாக அலுவலர்கள் முன்னேற்றச் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளராகவும் தனக்கிட்ட பொறுப்பினைத் திறம்பட வகித்து, அகவை முதிர்வின் காரணமாக 31.05.2016 அன்று மாலை தனது அரசுப் பணியை நிறைவு செய்கின்றவர் நமது அன்பிற்குரிய திரு. மதிவாணன் என்பதனைப் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

திரு. இரா.மதிவாணன் சங்கப்பணி மாநிலம் அளவிற்கு விரிவடைந்து, மாநிலத் தலைவரான திரு.எம்.சுப்பிரமணி, அவர்களுடன் இணைந்து பல அரிய செயல்களைச் செய்து வெற்றி கண்டவர் திரு. இரா.மதிவாணன்.

வேலை நிறுத்தப் போராட்டத்தைச் சமயோசிதமாக முடிவுக்கு கொண்டு வந்து தர ஊதியம் உயர்த்திப் பெற அரசாணை பெறப்பட்டது.

கிராம நிருவாக அலுவலர்களுக்கு 6 ஆண்டுகளில் 30% பதவி உயர்வு பெற்றது.

கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்றவர்களுக்கும், சிறப்பினத்தில் பணியில் சேர்ந்த கி.நி.அ.க்கு ஆண்டு தோறும் ஊதிய உயர்வுடன் வரன்முறை செய்ய உத்திரவிட்டது எனப் பட்டியலிடலாம்.

ஒரு தலைமைப் பண்புக்கு உதாரணமாக நடப்பு நிலவரங்கள் முதல் அனைத்துப் புள்ளி விவரங்களையும் தெரிந்து வைத்துக் கொண்டு, மிகத் திறமையானவராக தன்னை மாற்றிக் கொண்டவர். தன் தலைமைப் பண்பை நிலைநிறுத்திக் கொண்டு அனைத்துத் துறைகளிலும் அறிவை வளர்த்துக் கொண்டவர். தாங்கள் சங்கப் பிரதிநிதியாக தங்களின் நன்மதிப்பை உயர்த்திக் கொண்டீர். அதன் மூலம் தனிப்பட்ட தங்களுக்கென்று தனி மரியாதை வளர்த்துக் கொண்டவர் நீங்கள். தங்களின் செயல்பாடுகள் சரியானதாகவும் முடிவுகள் பாரபட்சமற்றத் தெளிவான செயல்பாடுகள் ஆகும்.

அதனால்தான் தங்களின் கருத்துக்கள் மாநிலக் கூட்டங்களில் சங்கப் பொறுப்பாளர்களால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

ஆரம்பகால முதல் பணி நிறைவு பெறும் வரை மாவட்டத் தலைவராக தொடர்ந்து பொறுப்பு வகித்த தன்னிகரில்லாத் தலைவன் நீ. உங்களோடு சங்க காலத்தில் மாவட்டச் செயலாளராகப் பொறுப்பு வகித்தவன் நானும் ஒருவன் என்ற மகிழ்ச்சியில் பணி நிறைவு பெறும் திரு. இரா. மதிவாணன் அவர்களும், அவரது குடும்பத்தாரும் 100 ஆண்டு காலம் நோய் நொடியின்றி வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் உங்களுக்கு பரிபூரணமாகக் கிடைக்கும் என்று இந்த நேரத்தில் வாழ்த்தி வணங்கி மகிழ்கின்றேன்.

இப்படிக்கு,



**ந. இராமன்**



**அரங்க. கணேசன்,** M.A.,
கிராம நிருவாக அலுவலர்
திருவரங்கம் வட்டத் தலைவர்
மேனாள் மாவட்டச் செயலாளர்
திருச்சிராப்பள்ளி.

## சங்கவாதி தலைவர் இரா. மதிவாணன்

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. –திருவள்ளுவர்

உலக வரலாற்றைச் சொல்லும் பொழுது இறைமகனாகத் தோன்றிய இயேசு கிறிஸ்துவை மையப்படுத்தி கிறிஸ்துக்கு முன் என்றும் கிறிஸ்துக்குபின் என்றும் காலத்தைப் பிரிக்கிறார்கள். அதுபோல கிராமநிருவாக அலுவலர்கள் வரலாற்றைத் தொகுக்கும் பொழுது திருச்சி மாவட்டத்தைப் பொருத்த அளவில் திரு. இரா. மதிவாணன் அவர்களை மையப்படுத்தித்தான் எதிர்காலத்தில் கிராமநிருவாக அலுவலர்கள் பேசவோ, எழுதவோ முடியும். அந்த அளவிற்கு தன் செயல் ஆற்றலால், மன உறுதியால், மதிநுட்பத்தால் எல்லோருடைய நெஞ்சங்களிலும் இடம் பிடித்தவர் அன்புத் தலைவர் இரா. மதிவாணன் ஆவார்.

தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒருவகையினர் ஆரவாரமாகப் பேசுவார்கள் ஆற்றலோடு இருப்பார்கள். ஆனால் அவர்களுக்குப் பிரச்சனையின் நுட்பம் பற்றிய ஞானம் குறைவாக இருக்கும். மற்றொரு வகையினருக்கு நுட்பமாக அலசி ஆராய்ந்து பார்க்கிற ஞானம் மிகுதியாக இருக்கும். ஆனால் அதைச் செயல்படுத்தும் ஆற்றல் குறைவாக இருக்கும். இந்த இரண்டு திறனும் ஒருங்கே அமையப்பெற்றுப் பிரச்சனையின் மூலத்தை நன்கு புரிந்துகொண்டு அதைத் திறம்பட செயல்படுத்தும் ஆற்றலுக்கும் சிறப்புக்கும் உரியவர் தலைவர் இரா. மதிவாணன் ஆவார்.

தலைவர் மதிவாணன் உடன் பல ஆண்டுகாலம் எத்தனையோ உயர் அதிகாரிகள், அலுவலர்களைச் சந்திக்கச் சென்று உள்ளேன். அவர்களோடு அவர் பேசும்முறை, எடுத்து வைக்கும் வாதம், உறுப்பினர்களின் நலன் காக்கவேண்டும் என்ற வேட்கை, உறுப்பினர்களுக்கு உரிமையைப் பெற்றுத்

தருவதில் அவருக்குள்ள ஈடுபாடு, பாதிக்கப்பட்டவர் யார் என்று முகம் தெரியாத பொழுதும் அந்த கிராமநிருவாக அலுவலரையும் பாதுகாக்க வேண்டும் என்ற முனைப்பு இவையெல்லாம் அவரைப் பற்றிய மதிப்பை உயர்த்தி என்னை வியக்கச் செய்துள்ளது. இது மிகையாகச் சொல்லப்பட்ட செய்தி இல்லை. இன்று அவரால் எத்தனையோ குடும்பங்களில் விளக்கு எரிந்துக்கொண்டு இருக்கிறது. இது சத்தியமான உண்மை. அந்தப் புண்ணியம் தான் அவரையும் அவரது குடும்பத்தாரையும் வாழவைத்துக் கொண்டு இருக்கிறது என்று நம்புகிறேன்.

தலைவர் இரா. மதிவாணன் அவர்களின் பணிநிறைவைப் பற்றி எண்ணும்பொழுது என்னுள் எழும் கவலை இவரைப்போல இவ்வளவு ஆற்றலோடும், திறனோடும் உறுப்பினர்கள் நலன்களுக்காகப் போராடும் இன்னொரு தலைமை எப்பொழுது வரும் என்பது தான். பணியில் சேர்ந்த பொழுது எந்த வேகத்தில் இருந்தாரோ அதே வேகத்தைத் தனது ஓய்வுக் காலம் வரையிலும் குறையாமல் வைத்திருந்த போராளி. மாவட்ட நிருவாகத்தின் தலைமைப் பொறுப்பில் சில சமயம் அதிகார மமதை கொண்ட, யாருடைய கருத்தையும் ஏற்க மறுக்கிற அதிகாரிகள் வாய்த்து விடுவது உண்டு. அத்தகைய சூழலில் வருவாய்த்துறையின் இதர துறைவாரிச் சங்கங்களின் பொறுப்பாளர்கள் மாவட்ட நிருவாகத்தை கேள்வி கேட்க அஞ்சும் பொழுது தலைவர் மதிவாணன் உறுப்பினர்கள் நலனுக்காக அஞ்சாமல் குரல் கொடுப்பார். "வருவாய்த்துறையின் மற்ற பிரிவினர் என்னிடத்தில் பலமுறை சொல்லக் கேட்டிருக்கிறேன். உங்களுடைய தலைவர் மதிவாணன்தான் முதுகெலும்பு உள்ள தலைவர். இவரைப் போன்ற தலைவர் எங்களுக்கு கிடைக்கவில்லையே" என்று ஏங்குவார்கள். யாருக்கும் அஞ்சாத அசுர வலிமைகொண்டவர் தலைவர் இரா. மதிவாணன் ஆவார்.

சிலருடைய தலைமை சில பின்புலங்களின் அடிப்படையில் அமைந்ததாக இருக்கும். ஆட்சியாளர்கள் ஆதரவு, அதிகார வர்க்கங்களின் ஆதரவு, பணபலம், சாதிய பலம் இப்படிப் பலவகைகளில் இருக்கக்கூடும். தலைவர் மதிவாணன் அவர்களுக்கு இருந்த ஒரே பின்புலம் உறுப்பினர்கள் ஆதரவுதான். எந்தச் சூழலிலும் 'அஞ்சாத மனஉறுதியுள்ளவர். எடுத்த காரியத்தை முடித்துக்காட்டும் திறமைசாலி, எவ்வளவு பெரிய பிரச்சனையாக இருந்தாலும், எவ்வளவு பெரிய உயர்அதிகாரியாக இருந்தாலும் அவர்களிடத்திலும் பேசி உறுப்பினர்களுக்கு உரிய நன்மையை செய்து கொடுத்துள்ளார். இவ்வளவு பெரிய அதிகாரியைச் சந்திக்க இயலாது. இந்தச் சூழலில் சந்திக்க இயலாது என்ற எந்த விதிவிலக்கும் இவரைக் கட்டுப்படுத்த இயலாது. இராமன் இருக்குமிடம்தான்

அயோத்தி என்பது போலத் தமிழ்நாடு கிராமநிருவாக அலுவலர் சங்கம், தமிழ்நாடு வருவாய் கிராமநிருவாக அலுவலர்கள் சங்கம், தமிழ்நாடு கிராமநிருவாக அலுவலர்கள் முன்னேற்றச் சங்கம் என்ற எந்த அமைப்பாக இருந்தாலும் அவர் இருந்த அமைப்பை உயிரோட்டம் உள்ளதாக, செயல்பாடு மிக்கதாக மாற்றிக்காட்டிய திறமை அவருடையது. திருச்சி மாவட்டத்தில் கிராமநிருவாக அலுவலர்களுக்கு எந்த ஒரு பயன் கிடைத்திருந்தாலும் அது அவருடைய உழைப்பால், முயற்சியால் போராட்டத்தால் கிடைத்ததாகத்தான் இருக்கும்.

தலைவர் மதிவாணனைப் பற்றிச் சொல்லும் பொழுது இந்த அதிகாரியிடம் இப்படிப் பேசினார், இந்தப் பயன் இவரால் கிடைத்தது, இந்த இந்த நபர்கள் இவரால் பயன்பெற்றார் என்ற எந்தச் செய்தியையும் சொல்ல விரும்பவில்லை. அப்படிச் சொல்ல விரும்பினால் அதற்குத் தனியே ஒரு புத்தகம்தான் எழுதவேண்டும். மதிவாணனைப் பிடிக்காதவர்கள் இருந்தார்கள். மதிவாணனுக்கு எதிரிகளும் இருந்தார்கள். எதிரிகளும் இவருடைய சங்கச் செயல்பாடுகளைப் பற்றிச் சொல்லும்பொழுது இவரைப் போலச் செயல்பாடு மிக்க தலைவர் வேறு யாரும் கிடையாது என்பார்கள். எதிரிகளாலும் போற்றப்பட்ட செயல் வீரர் தலைவர் இரா. மதிவாணன் ஆவார்.

இன்றைய இளம் தலைமுறையினர் அவரிடத்தில் கற்றுக் கொள்ள நிறைய செய்திகள் உள்ளன. தலைமைப் பணி சொல்லிக் கொடுப்பதால் மட்டும் வந்துவிடாது. அதற்கு உணர்வு வேண்டும். உரங்கொண்ட மனம் வேண்டும். தவறு என்றால் தட்டிக் கேட்கும் துணிவு வேண்டும். பிறரை உள்ளப் பூர்வமாக நேசிக்க வேண்டும். இந்தப் பண்புகளை நீங்கள் வளர்த்துக் கொண்டால் நீங்களும் மதிவாணன் ஆகலாம். நமக்காக உழைத்திட்ட தலைவர் மதிவாணன் பணிநிறைவு ஓய்வு பெறுகிறார். அவரும் அவருடைய குடும்பத்தாரும் எல்லா நலங்களையும், வளங்களையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழவேண்டும். சங்கப் பணியைச் சிறப்பாக நிறைவு செய்யும் தலைவர் இரா. மதிவாணன் புதிய பொறுப்புகளையும், தலைமையும் பெற்று சமூகப் பணியிலும் சிறப்பான நிலையை அடைய நாம் அனைவரும் அவரை வாழ்த்துவோம். வாழ்க! தலைவர் மதிவாணன்!

**அரங்க. கணேசன்**



**வை. சங்கர்**
மாவட்டச் செயலாளர்,
திருச்சிராப்பள்ளி.

மதிவாணன் என்ற மானமிகு மனிதனை இவ்வுலகிற்குத் தந்த எங்கள் மாநிலப் பொதுச் செயலாளரின் முதல் தெய்வமான தாய் தந்தைக்கு எனது சிரம் தாழ்த்தி வணக்கத்தினையும்,

மதிவாணன் என்ற மானமிகு தலைவரை எங்கள் சங்கத்திற்குத் தந்த எங்கள் மாவட்டத் தலைவரின் தலைவிக்கு எனது கரம் உயர்த்தி நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முகம் காணாத உறுப்பினருக்கும் பணியில் பாதிப்பு ஏற்பட்டால் அவர்களின் உள்ளத்தின் துடிப்பை நாடி பிடித்துப் பார்த்துத் தனக்கென்ன பாதகம் நேரும் என்பதைக் கூட எண்ணாமல் தன்னுடன் இருப்பவர்களுக்கு சாதகமே நேர வேண்டும் என்று வாழ்ந்த தன்னிகரற்றத் தலைவர்.

தனது உறுப்பினர் நலனுக்காகக் கோட்டை வரை சென்று ஒரு கோட்டையே கையெழுத்தாக இட்டுச் சங்கக் கோரிக்கைகளைக் கோட்டை விடாமல் நிறைவேற்றிய உண்மையான தலைவர்.

இவரைப் பற்றி நன்கு அறிந்த மற்ற தோழர்கள் கூட முதுகெலும்புள்ள ஒரே தலைவன் இரா. மதிவாணன் என்று பாராட்டும் வகையில் தன் சங்கப் பணியை முழுமையாக மேற்கொண்ட தலைவர்.

இளைஞனுக்கு இளைஞனாக அலுவலகத்தில் முதிர்ந்தவருக்கு முதிர்ந்தவராக இடைவெளி இன்றி இன்று வரை அனைவரையும் அரவணைத்து அவரவர் எண்ணத்தை அறிந்து அந்த வண்ணம் செயல்பட்ட சிறப்பான தலைவர்.

பணியில் சேர்ந்த நாள் முதல் பயிற்சி காலத்தில் இருந்து பணி ஓய்வு பெறும் காலம் ஆகிய இன்று வரை சங்கப் பொறுப்பினை தேர்தல் மூலமேவெற்றி கண்ட வெற்றி நாயகன்.

எதிரியாக இருந்தாலும் எதிரியாக நினைக்காமல் அவரவர் தேவையறிந்து எப்பொழுது அவர்களுக்கு எது தேவை என்பதை அறிந்து சிறந்த முறையில் சேவை செய்த சேவகன்.

செம்மண் புழுதிகாட்டில் இருந்து தமிழரின் உடையான வேட்டி கட்டி துண்டு போட்டு பணிக்கு வந்த முதல் நாளிலேயே தன்மானம் காக்க தாசில்தாருடன் தர்க்கம் செய்த அக்கினிப் பறவையின் அடங்காத் தமிழனின் அரசுப் பணிப் பயணம் அன்று முதல் செவ்வனே இன்று வரை மாசற்றப் பணியாக முப்பத்திரண்டு ஆண்டு காலம் முடித்தமைக்கு நற்சான்றும் பெற்று அரசுப்பணியில் இருந்து ஓய்வுபெறும் இறுதிநாள் வரை போராடும் குணம் கொண்ட கிராமநிருவாக அலுவலர்கள் முன்னேற்றச் சங்கத்தின் திருச்சி மாவட்டத்தின் போர்ப்படைத் தலைவரே வாழ்க பல்லாண்டு பல்லாண்டு என கனத்த இதயத்தோடும் கலங்கிய கண்களோடும் சமர்ப்பிக்கின்றேன்.

தாங்கள் வாழும் வரை தங்களின் விருப்பமான அன்பு, ஆனந்தம், அமைதியுடன் நீண்ட நாட்கள் வாழவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தனை செய்கிறேன்.

என்றும் நன்றியுடன்,

**வை. சங்கர்**

# உள்ளுறை

1. மதிவாணர் பணி ஓய்வு மணிமாலை 1

2. ஓய்வு விளக்கம் 4

3. ஓய்வும் தொண்டும் 11

4. வள்ளுவர் காட்டும் குடும்பம் 15

5. கூட்டுக் குடும்பம் 22

6. இல்லறத்துறவு அல்லது மணிவிழா 28

7. துறவும் தொண்டும் 35

8. உழைப்பும் உயர்வும் 40

9. முன்னை ஊராட்சி முறை 47

10. ஊராட்சி அலுவலர் கடமை 52

# 1. மதிவாணர் பணி ஓய்வு மணிமாலை

நிறைமதிபோல் முழுதறிவும், நிறை பண்பும் பெற்று வாழ்வார்க்குத் தமிழுலகம் தந்த மணிப்புகழ்ப் பெயர்ப் பரிசு மதிவாணர் என்பது. அப்பெயருடையார் வாழ்வு, அப்பெயர்க்குத் தகவே அமைந்து, ஊராட்சிப் பணியில் இருந்தாலும் நாட்டாட்சியர் கூட்டமைப்புப் பொறுப்பாளியராகவும் தம் தகவால் அடைந்து, பணியோய்வு பெறுகிறார். இரா. மதிவாணர்.

திருத்தவத்துறை (இலால்குடி) வட்டத்துக் கருடமங்கலம் என்னும் ஊர், இவர் தோன்றும் பெருமைபெற்றது.

"ஒரு மண்ணின் மதிப்பு, அம்மண்ணில் பிறந்த மாண்பர் மதிப்பு" என்றவர் பாட்டி ஔவையார். அதனால், மதிவாணர் பிறப்பால் கருடமங்கலமும், கருடமங்கலச் சிறப்பால் மதிவாணரும் ஒன்றாகி உடனாகிச் சிறக்கின்ற வாய்ப்பாயிற்றாம்.

மதிவாணரை வயிறு வாய்ந்த பெருமையர் கலைமகள் பெயர் கொண்ட சரசுவதியார் தந்த அருமைத் தந்தையார் இராமசாமியார். இவ்வினிய இணையரின், தலைமகனாராகத் தோன்றியவர் மதிவாணர். இவர் தம் பிறந்த நாள் 29.05.1958.

இவர் உடன் பிறந்தவர், ஆடவர் இருவர்; தம்பியர். மதிவாணர் கலைபயில் தெளிவு, இளங்கலை அறிவியல் பட்டம் பெறச் செய்தது. அப்பட்டம் பெற்றோர், அந்நாளில் வேறு அலுவல்களுக்குச் சென்றிருக்கவும் வாய்க்கும். பதவி உயர்வும் பெறக்கூடும். ஆயினும்,

'ஊருக்கு உழைத்தல் யோகம்' எனப் பாரதியார் கூறுவது போல் மக்கள் தொண்டுக்கு மணியாக வாய்த்த பணிக்களம் ஊராட்சி அலுவலராம் பணியே எனக்கொண்டு, 1984 ஆம் ஆண்டில் அப்பணி பெற்றார். பணியால் இன்புறவும் பணிச்சீர்மையால், "தமிழ்நாடு கிராமநிருவாக அலுவலர்கள் முன்னேற்றச் சங்கத்தின்" திருச்சிராப்பள்ளி மாவட்டத் தலைவராகவும், மாநிலப் பொதுச் செயலாளராகவும் உயர்வுற்றார். கருடமங்கலச் சிற்றூர்க் கொடை, மாநிலப் பேறாக அமைந்தது.

இவர் மங்கல மனையற மாண்பராக வாய்த்த பெருமையர் தம் பெயரிலேயே நறுமணம் கொண்ட நங்கை கத்தூரியார்.

துணை நலம் சிறப்ப அமைந்தால் அன்றி, ஒருவர் பொதுப் பணியில் ஊன்றிச் சிறப்புற இயலாது. ஆளன் பொறுப்பையும், தாமே தாங்கும் ஆளுமை உடையராயும், வாழ்க்கைத் துணை நலத்தராய் உதவுநராகவும் அமைந்தமையால், மதிவாணர் தம் கடமைகளைக் கருத்துடன் செய்வதொடு, பொதுப்பணிக்கும் ஆளாக்கிக் கொள்ளவும் வாய்க்கின்றதாம்.

மதிவாணன் கத்தூரியராம் இணையர் பெற்ற பெரும் பேறாக வாய்ந்த மக்கள் மூவர். ஆடவர் இருவர், மகளிர் ஒருவர். மூவரும் மங்கல மனையறம் ஏற்றுச் சீருற வாழ்கின்றனர். காற்றாடி போல் சுழல்வது காலம். இன்னும் பல்லாண்டுகள் பணிசெய்யும் திடமும் திறமும் இருப்பினும் 58 ஆம் அகவையில் ஓய்வு என்பது அரசாணை. ஆதலால், 32 ஆண்டுகள் பணி செய்து 31.05.2016-ல் ஓய்வு பெறுகிறார்.

மதிவாணரைப் பொறுத்த அளவில் சட்டப்படி பணி ஓய்வேயன்றி, அவர் திட்டப்படி ஓய்விலாத் தொண்டராகத் திகழ்தலேயாம்.

இன்னும் சொன்னால் அலுவலகப் பொறுப்பு, வரிதண்டல், வரி செலுத்தல் எனப் பொழுதைச் செலவிடாமல், முழுதுறு பொழுதும் தொண்டராக விளங்கும் பேற்றை ஓய்வு வழங்குகின்றது என்பதே மதிவாணர் உண்மை நிலையாம்.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

என்பது, தொண்டே வாழ்வாகிய அப்பரடிகள் திருவாக்கு அத்தொண்டே தெய்வப்பணி, இறைநிலைப்பணி என்பதால்,

"தொண்டலால் துணையும் இல்லை
ஐயன் ஐயாறனார்க்கே"

என்னும் மணி மொழியும் அவருடையதேயாம். யான், திருச்சிராப்பள்ளி, காவிரித் தென்கரை சார் அல்லூர் எனப்படும் திருவளர்குடியில் திருவள்ளுவர் தவச்சாலை அமைக்குங்கால், ஊராட்சியராக என் பேற்றால் அமைந்திருந்தவர் மலைக்கொழுந்தர்; அவரோடு எப்போதும் உடனாவவர் மணிவண்ணர். இவ்விணையரொடும் இணைந்தவர் கணேசனார். இம்மூவர் தொடர்பு தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர்கள் முன்னேற்றச் சங்கத்தின் ஆண்டு

விழாக்கள் தோறும் ஓய்வரைப் பாராட்டவும் பொழிவாற்றவும் செய்தது; அவ்விழாக்களில் முன்னின்று கடனாற்றும் மதிவாணர் அன்பும் தொண்டும் அரவணைப்பும் என்னை ஈர்த்தன. அவர் என்னுள் ஆனார்! யான் அவருள் ஆனேன்! தவச்சாலை வாழ்வு இருபது ஆண்டுகள்! அவ்வாழ்வு வழங்கிய பேறுகளும் கொடைகளும் என்வாழ்வின் பொற்காலம்! அப்பொற்காலம் நூற்றாண்டு வாழ்விலும் எட்டரிய நற்காலமாம்! எண்ணுதோறும் எண்ணுதோறும் இன்ப ஊற்றெடுக்கும் எத்தனை எத்தனை அன்புகளை, நண்புகளை வழங்கிய காலம்!

மதிவாணர் வினையால் வினையாக்கிக் கொள்ளும் 'வினை செயல் வகைத் திறத்தர். அதனால், தாம் பணி ஓய்வுபெறும் விடை பெறு விழா'வொடு, **தம் தவத் தந்தையார் 25 ஆம் நினைவு நாளையும்** இணைத்துக் கொண்டார்!

அப் பெருந்தகை வழங்கிய கொடை தானே, மதிவாணர் பிறப்பும் பேறும் பிறவும்! அதனால், தம் பணி ஓய்வு மணிமாலையைத் தம் தந்தைக்குப் படையலாக்கி வழிபடுகின்றார்.

முன்னை வாழ்வர், பின்னை வரும் வாழ்வர்க்குக் காட்டும் வழிகாட்டும் வகைமை ஈதாம்!

மதிவாணர் வாழ்வு, முழுதுறு தொண்டு வாழ்வாகத் துலங்குவதாக!

வாழிய நலனே! வாழிய நிலனே!

## 2. ஓய்வு விளக்கம்

ஓய்வு என்பது அகவைப்படி அரசு வழங்கும் கட்டாய ஆணைத்திட்டம்! அதன்படி, அவரவர் அதுவரை பார்த்த அலுவல் வகை ஓய்வை அல்லாமல், வாழ்வார்க்குரிய ஓய்வு இல்லையே!

இயற்கை இயங்கியலை அறிந்தவர் எவரும் தாம் வாழும் நாளின் எல்லையளவும், ஓயாத் தொண்டரே அல்லாமல் ஓய்வர் ஆகார்!

ஞாயிறு -நாள் மீன் ஓய்கிறதா?

திங்கள் முதலாம் கோள்கள் ஓய்கின்றனவா?

நாம் வாழும் நிலையமாம் உலகம் ஓயாச் சுழற்சிய தல்லவா!

இவை எல்லாம் கண்காண நாளும் பொழுதும் காட்டும் காட்சி என்ன?

“ஓயாதே! ஓயாதே!” என்பதே!

இரும்பால் ஆகிய கத்தி! பயன்படுத்தவில்லை! எடுக்கவில்லை! துடைக்கவில்லை! ஆறுமாதம் – ஓராண்டு! அப்படியே கிடக்கிறது! துருப்பிடித்து வல்லிரும்பு, மெல்துருவால் மெல்லப் பட்டே அழிந்து போகின்றது! பயன்படுத்தி இருந்தால் - பதப்படுத்திக் கொண்டே இருந்தால் - துருப்பிடிக்குமா? தன் அழிவைத் தானே தேடிக் கொள்ளுமா?

‘ஓடு’ என எத்தனை ஊர்ப் பெயர்கள்?
சிற்றோடு, பேரோடு, ஈரோடு, வெள்ளோடு!
நீர் நில்லாமல் – தேங்காமல் – ஓடுவது ஓடு!
மழைநீர் வீட்டுள் வராமல் – ஈரக்கசிவில்லாமல்
இருக்கப் போடுவது ஓடு; மாடியில் பதிப்பது
தட்டோடு; இந்த ஓடுகள் நமக்குச் சொல்வது
என்ன?
வாழ்வில் சோம்பல் இல்லாமல் ஓடு! ஓடு! உழை
உழை! உயர் உயர்!
உயர்வுக்கு எல்லையே இல்லை! உயரும் அளவும்
அயர்வில்லாமல் உயர்! – என்கிறது அல்லவா

ஓடு! ஓடை தந்த கொடை ஓடு! ஓடு சொல்வது
என்னைப்பார்! நீயும் ஓடு என்பது.
'குருதி' உடலில் ஓரிடத்தில் நின்றுவிட்டால்
என்னாகும்! உடலெல்லாம் பரவி ஓடிக் கொண்டே
இருப்பதால் தானே உயிரியங்குகிறது! அதனை
ஓட்ட உயிர்க்காற்று இடையீடு இல்லாமல்
போகின்றதே! உள்ளே அமுதக் காற்றைச் செலுத்தி
நச்சுக் காற்றை வெளியேற்றிக் கொண்டே இருப்பதால் தானே
உயிரியக்கம் நடைபெறுகின்றது!
காற்றுத் தடைப்பட்டால், குருதி ஓட்டம் தடைப்பட்டால்
முடிந்து போன வாழ்வுதானே அது.
திருக்குறளில் 'மடியின்மை' என்பதோர் அதிகாரம்
(61) சோம்பல் இல்லாமை என்பது அதன் பொருள்
அதன் முதற்குறளே என்ன சொல்கிறது?
'குடி' (குடும்ப) என்பது, ஓர் அரிய விளக்கு.
திரியிட்டோம்! எண்ணெய் விட்டோம்! நன்றாக
எரியும்! என்று மீளப் பாராமல் இராதே!
எண்ணெய் குறைகிறதா? பார்த்து ஊற்று!
திரி எரிய எரியக் கருக்கு உண்டாகும்! கருக்கைப்
பார்த்துத் தட்டு! திரியைத் தூண்டு! இப்படிப்
பாராவிட்டால் விளக்கிருக்கும் – எண்ணெய் இருக்கும்
திரியும் இருக்கும்! கருக்கைத் தட்டாவிட்டால்
ஒளிகுறைந்து குறைந்து அணைந்தே போகும்!
"குடி என்னும் குன்றா விளக்கம் மடி என்னும்
மாசு ஊர மாய்ந்து கெடும்" (601)
என்பது அக்குறள். மடி–சோம்பல், மாசு– கருக்கு
இரும்பு அழிய – 'துரு'
விளக்கொளி அழிய – 'கருக்கு'
முழுத்தாள் ஒன்றை எடுங்கள் பாதியாய்
மடியுங்கள்; பாதியை மடியுங்கள் அதில்பாதி
கால் ஆகிவிட்டதா? அதனை மடியுங்கள்; மேலும்
மடியுங்கள், மடியுங்கள்; மடிக்க மடிக்கச்
சுருங்குகிறதா?
மடிகொண்டவன் குடியும் அப்படித்தான் மடியும்!

மட்கி மண்ணாகவும் போகும். இதனைத்
திருவள்ளுவர்,
"மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து? (603)
"மடி கொண்டவன் மடியும் முன்னர் அவன்
பிறந்த குடிமடியும்" என்கிறார்.
எந்த உறுப்புக்குப் பயிற்சி தரவில்லையோ,
அந்த உறுப்பு படிப்படியே செயலற்றுப் போகும்
அலுவலகத்திலும் நாற்காலியில் இருத்தல்;
வீட்டிலும் நாற்காலியில் இருத்தல்; உண்ணும்
போதும், உறவாடும் போதும் நாற்காலி!
படுக்கையோ கட்டில் மெத்தை! அவரால்
கீழே உட்கார முடியாது; குத்துக் காலாக
இருந்தாலும் குனிய முடியாது; எழுந்திருக்கவும்
ஒருவர் கைகொடுக்க வேண்டும்!
90 வயதுக்காரர் கீழே உட்கார்கிறார்! விரைந்து
நடக்கிறார்! 30 வயதுக்காரர்க்கு அவ்வாறு
செய்ய இயலவில்லை. ஏன்? பயிற்சி இல்லை!
படைத்துறைக்கும் காவல்துறைக்கும் தாம்
பயிற்சி வேண்டும் என்பது இல்லை! வாழும்
அனைவருக்கும் பயிற்சி வேண்டும்!
"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் – நித்தம்
நடையும் நடைப்பழக்கம்"
பழக்கம் – வழக்கமாய் – ஒழுக்கமாய் ஆகிவிட்டால்
இயல்பாகிப் போகும்!
கடைக்கு – அஞ்சலகத்திற்கு – உள்ளூர் நண்பரைக்
காண்பதற்கு நடந்தே போனால், மருத்துவர் சொல்லி
நடக்க வேண்டிய நிலை இல்லையே!

ஆறுகல் தொலை, ஏழுகல் தொலை நடந்தேன் என ஆண்கள் பெருமையாகச் சொல்கிறார்கள்! அதனைச் சிறுமையாக நினைப்பாரும் உளர்! ஆனால் பெண்கள் நடக்கும் – வீட்டுக்குள் நடக்கும் – நடையை ஒரு நாளைக்குக் கணக்கிட்டால் எத்தனை கல்! அது நடையில்லையா? இப்பொழுது மருத்துவர்

கட்டளையால் நடக்கும் மகளிரும் காணப்படுகின்றனர். அவர்கள் வீட்டு வேலைக்கு ஆள் வைத்து ஆணையிடுபவராக ஆயமையே காரணமாம்.

பெட்டிக்கு மூடி, புட்டிக்குமூடி-உண்டு. ஆனால் மூடி முடங்கிக் கிடப்பவர் வாழ்வு வாழ்வா? வீட்டுக்கு முகடு போடுவதுபோல் உடல் முழுக்க மூடிச் சோம்பேறியாய் இருப்பவரை முகடி என்றார் திருவள்ளுவர். மூதேவி என்றும், மூத்தவள் என்றும், தவ்வை (அக்காள்) என்றும் வழங்குவது வழக்கமாயிற்று, சுறுசுறுப்பை உடையவள், செய்யவள், திருமகள், சீதேவி, இளையவள் என்பதும் வழக்கமாயிற்று.

"நான்கெட்டுத் தொலைந்தே போகவேண்டும்" என்று முடிவு செய்தவர் நான்கு அணிகலன்களை விரும்பி அணிவர் என்கிறார் திருவள்ளுவர்.

"நெடுநீர் மறவி மடி துயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்"

என்பது (605) காமக்கலன்- விரும்பி அணியும் அணிகலம்

**நெடுநீர்**

ஒரு செயலை எப்பொழுது செய்ய வேண்டுமோ, அதனை அப்பொழுதே செய்துவிட வேண்டும். "பிறகு செய்யலாம், நாளைக்குச் செய்யலாம், பின்னே பார்க்கலாம் அதைச் செய்யாமல் இருந்தால் என்ன" எனப் பலவகையாக எண்ணிக் காலத்தே செய்யாமல் பொழுதை நீட்டித்து, ஏனோதானோ என்று செய்வது **'நெடுநீர்'** என்பதாகும். அதாவது காலத்தை நீட்டி விரும்பியும் விரும்பாமலும் செய்வது நெடுநீர் என்பதாம்.

"நாளை என்பது வேளை தவறும்"
நாளைப்பொழுது எப்படி இருக்கும்? எவரறிவார்!
"நின்றான், இருந்தான், கிடந்தான், போனான்"
என்னும் நிலையதல்லவா வாழ்வு?

தனக்கு அடுத்த நொடியில் என்ன நடக்கும் என்பதை எந்தக் கணியனும் அறியான்! ஏனெனில், இயற்கைக் கொடையாம் மறைப்பாற்றல் அஃதாகும்.

**மறவி**

மறவி யாவது மறதியாம். இயற்கைக் கொடை நான்கனுள் தலைப்பட்டது மறதி. மற்றவை மறைப்பு, உறக்கம், பேருறக்கம் என்பவை.

மறதி வேண்டும்! மறதி இயற்கையானது. பண்பட்ட தன்மையர்க்கு அமைவது. இரண்டு நாள்களுக்கு முன்னர் உண்டது என்ன என்று நினைவில் உள்ளதா? உடுத்தது நினைவில் உள்ளதா? கண்டு பேசிய பேச்செல்லாம், பார்த்த காட்சி எல்லாம் நினைவில் உள்ளனவா? இல்லை! அவற்றை மறக்க வேண்டும். மறவாமல் அப்படியே நினைவில் நின்றால் மண்டையில் நண்டேறிக் கொண்டது போலாகி விடும்.

வேண்டாக் குப்பையைக் கூட்டித் தள்ளுவது போல் முயற்சியாளனின் மூளை வேண்டாதவற்றை அப்போது அப்போதே கூட்டித் தள்ளிவிடுகிறது. அந்த மறதி இயல்பானது வேண்டியது. நன்றியை மறக்கலாமா? உதவியை மறக்கலாமா? நல்லோர் சொல்லை மறக்கலாமா? அறத்தையோ, தொண்டையோ மறக்கலாமா? குடும்பக் கடமையை - அலுவல் திட்டத்தை - நல்லோர் உறவை - நாளும் ஓதுதலை மறக்கலாமா? மறந்தால் மாந்தர் என்னும் பிறவிப்பயனே இல்லாமல் போகும்! மறக்க வேண்டியதை மறந்து, மறக்க வேண்டாததை மறவாமல் இருக்க வேண்டும்.

**மடி**

மடி என்னும் சோம்பல் பற்றி முன்னரே கண்டோம். சோம்பர் என்பவர் தேம்பித் திரிவார். உப்பு மலைமேல் உட்கார்ந்து சாப்பிட்டாலும் உப்பை அள்ளிப் போட்டால் தானே சுவை! ஒரு மடத்தில் இரண்டு சோம்பேறிகள் படுத்திருந்தனர். ஒருவன் கண்ணைத் திறந்து பார்க்க அம்பலத்தின் (மடத்தின்) ஒரு பக்கம் தீப்பற்றி எரியக் கண்டான்.

உடன் சோம்பேறியிடம்,

"அம்பலம் வேகுது ஐயனே"

என்றான். அச்சோம்பேறி கண்ணைத் திறவாமலே,

"அதையும் தான் சொல்வானேன்
வாயும்தான் நோவானேன்"

என்றான். இப்படிச் சோம்பேறி பற்றிய எளிய கதைகள் பல!

எறும்பைப் பார்த்தால் சுறுசுறுப்பைக் கற்கலாம். தேனீயைப் பார்த்தால் தெளிவாகக் கற்கலாம். சேவலுக்கு என்ன, வேலைக்கா போகப்போகிறது. விடிகாலை எழுவானேன்? காக்கை கரைதல் நம்மை எழுப்பவில்லையா?

'சோம்பல் கெடுதி பாப்பா' என்பது பாப்பாவுக்கு மட்டுமில்லை! பாப்பா தொட்டுத் தொண்டு கிழவர் வரை வேண்டியது சோம்பல் இல்லாமை! சோம்பலைச் சுட்டெரித்தவர் எவரோ அவர் வாழ்வு, சுடர்மிக்க வாழ்வாம்!

**துயில்**

துயிலாவது உறக்கம். உறக்கம் கட்டாயம் வேண்டும். படுத்தவுடன் உறங்கும்பேறு, அரும்பெரும்பேறு, ஒரு நாள் உறக்கமில்லாமை ஒன்பது நாள் தொல்லை!

24 மணிநேர நாளை உலகம், 8 மணி நேரம் வேலை; 8 மணி நேரம் ஓய்வு; 8 நேரம் உறக்கம் என முப்பகுப்புச் செய்துள்ளது. அவ்வளவு, கட்டளை அளவன்று!

குழந்தை 20 மணி 21 மணி என உறங்கும்!

முதியர்க்கு 6 முதல் எட்டு மணி போதும்!

உழைப்பு வல்ல எடிசனுக்கு 80 ஆம் ஆண்டு விழா எடுத்தனர்.

"உங்கள் கணக்கு, தவறானது. என் வயது எண்பது இல்லை" என்றான்! அனைவரும் திகைத்தனர்! "என் வயது 200" என்றான்! செவியைத் தீட்டிக் கூர்ந்து கேட்டனர். நாள் ஒன்றுக்கு 20 மணி நேரம் வேலை பார்ப்பவன் நான். ஒருநாளில் இரண்டரை நாள் வேலை பார்க்கிறேன். ஆதலால் வயது 200 என விளக்கினான். அவனால், உலகுக்கு வழங்கப்பட்ட கொடைகள் இருநூறுக்கு மேற்பட்டவை.

பெங்களூருவில் கபர்ன்பூங்காவை ஒட்டி பொறிஞர் 'விசுவரேசரையா' வீடு. அவரைக் காண மாணவர்களுடன் சென்றேன். அப்பொழுது அவர்க்கு வயது 101, இம்முதுமை வரை வாழ தாங்கள் கொண்ட முறை என்ன என வினவினேன். "எனக்கு வறுமையும் உண்டு, வளமையும் உண்டு. நோய் நொடிகளும் உண்டு காலன் என்னைக் கொண்டு போக மும்முறை வந்து கதவைத் தட்டினான். முதல் முறை, படித்துக் கொண்டிருந்தேன்; படிப்பவனுக்கு இடைஞ்சல் தரக் கூடாது" எனப் போய்விட்டான். இரண்டாம் முறைவந்தான். அப்பொழுது எழுதிக் கொண்டிருந்தேன். "எழுதுபவனுக்கு இடைஞ்சல் செய்யக்கூடாது" எனப் போய்விட்டான். மூன்றாம் முறை வந்து கதவைத் தட்டிக் கழுத்தையும் நீட்டிவிட்டான். அப்பொழுது "ஒரு கருவியை உருவாக்கிக் கொண்டிருந்தேன். உலகுக்காக உருவாக்கும் செய்யும் இவனைக் கொண்டு போகக்கூடாது எனப் போய்விட்டான்" என்றார்.

உடலைக் கெடுக்காமல் உழைக்கும் எவரும் நெடிது வாழலாம் என்பதை நயமாக விளக்கிய அவர் பட்டறிவுத் திறம், என்னுள் என்றும் பசுமையாக நிற்பதாம்.

உறங்க வேண்டும் அளவு உறங்கி, உழைக்க முடியும் அளவும் உழைத்துக் கொண்டிருந்தால் உடல் நலமாகவும் நீடித்தும் வாழலாம் என்பதாம் திருக்குறளில் 'குடி செயல்வகை' என்பதோர் அதிகாரம்! (103)

என் கடமையைச் செய்வதற்கு எவரையும் நான் எதிர்பார்க்கமாட்டேன்; கையை அசைத்து வா, வந்து உதவு எனச் சொல்ல மாட்டேன் என்பது பெருமிதமான வாழ்வு!

என் குடும்பத்தை முன்னை நிலையிலும் மேம்படச் செய்வேன். என நோக்கு, என் உயர்வால் என் குடும்பம் உயரவேண்டும். அதற்குரிய பொறுப்பை ஏற்க வேண்டிய யான், பிறரை எதிர்பார்க்கலாமா? என் பொறுப்பைத் தட்டிக் கழிக்கலாமா? என் பெற்றோர் இக்குடும்பமாம் ஆலமரம்! அடிமரம் அவர்கள்! யான் அம்மரத்தின் வீழ்து. அடிமரம் காலத்தால் - கறையானால் - காற்றால் அற்றுப் போனாலும் வீழ்து மரத்தைத் தாங்குவது போல் தாங்கப் பிறந்தவன் யான். என்னைத் தக்கவன் ஆக்குவேன். குடும்பமரம் தழைக்க நீராவேன்; நிலையாவேன்; நிழலாவேன்; உற்றார் உறவு ஒன்ற இடமாவேன்! பிறரைத் தாங்க இருக்கும் நான் பிறர்க்குப் பாரமாக இருக்கவே மாட்டேன்.

போர்க்களத்தில் நிற்கும் தலைப்படையன் யான்! வெள்ளம்போல் படைவந்தாலும் கல்லணை போல் தடுத்து நிறுத்த வல்லவன் யான்! படைவீரர்க்கு நாடுகாவல்! எனக்கு வீடுகாவல்! வீடு காவல் அளவில் நிற்பது உயர்பிறப்பு - ஆறறிவுப் பிறப்பு என்பதன் அடையாளம் ஆகாது. ஊர் காப்பானாய் நாடு காப்பானாய் உயரவேண்டும்! அந்த எண்ணம் எனக்கு வந்தால் போதும்! ஓடி ஓடி வருவர்; கூடிக் கூடி நிற்பர்; இணையாவர்; துணையாவர்; யான் கோயில் சென்று வழிபட்டு வேண்ட வேண்டியது இல்லை; என் துணிவையும் துணையையும் பார்த்துவிட்டுத் தெய்வமே உடையை வரிந்துகட்டிக் கொண்டு என் கையைப் பற்றி முன்னிழுத்துக் கொண்டு செல்லும். நான் காலம் நேரம் பாரேன்; சோம்பிக்கிடவேன்; குடிமானம் இனமானம் என்பதை நோக்குவேன் என் மானம் பற்றி என் வீட்டுள்–என் சுற்றத்துள்– பாரேன் எனத் துணிவான் என்பது குடிசெயல் வகை வள்ளுவத் திரட்டாகும்.

❧♦❧

# 3. ஓய்வும் தொண்டும்

செம்மையாக அலுவலை முடித்தவர் ஓய்வு பெறும் போது மகிழ்வே அடைவர். ஏனெனில் அவரவர் விரும்பியவாறு 'எக்கட்டும், இக்கட்டும்' இல்லாமல் குடும்பத்தினர் முழுதுறு காவல் கடமையராய், உரிமை வாழ்வு வாழலாம்.

செம்மையாகக் கடமைசெய்யாதவர், அதிகாரம் செருக்கு, கையூட்டு, எடுபிடி, ஏவல், எதிர்பார்ப்பு என வாழ்ந்தவர் ஓய்வு பெற்றாலும், மனத்தில் கறையும் குறையும் ஆட்டம் போட்டுக் கொண்டே இருக்கும் ஏதோ எல்லாமும் பறிபோனதாகவும், மதிப்பை இழந்தவராகவும் உணர்வர்.

அலுவலகத்தில் அலுவலராகவும், வீட்டில் குடும்ப உறுப்பாகவும், அன்பு, நண்பு, உற்றார் உறவு, சுற்றம் சூழல் இவற்றில் இரண்டறக் கலந்து அளவளாவி வாழ்பவராகவும் இருந்தால் ஓய்வை மகிழ்வு விழாவாகவே - பொங்கல் விழாவாகவே – கொண்டாடுவர்.

அலுவலே, வாழ்வு இல்லை. வாழ்வுக்கு வேண்டிய பொருள் தேடி வாழ ஒரு வாய்ப்பு. அவ்வாய்ப்புக் கிட்டாமல் எத்தனை பேர் அலைக்கழிகின்றனர். அது கிடைத்த வாய்ப்பைப் பெரிதாகக் கருதி, காசுக்கும் கடமைக்கும் உழைப்பதுடன், கையில் தவறாமல் மாதந்தோறும் சம்பளம் பெற்றுக் கொண்டே ஊர்நலத் தொண்டும், நாட்டு நலத்தொண்டும் செய்யக் கிடைத்த வாய்ப்பாகக் கொண்டால் காலமெல்லாம் ஊரவர் நெஞ்சில் இடம் பெறுவார். அவர் இடத்தை அலுவலகத்தை- பூந்தோட்டமாகப் பூரிப்போடு எண்ணி வருவர். நல்லதோர் மாந்தரை, நண்பரை, அன்பரை, இனியரை - தொண்டரைக் காண வருவதுபோல் பொதுமக்கள் புன்னகையுடன் வருவர்.

புறம்பான வழியில் எவரேனும் வருவராயினும் அவர்க்கும் கடுமுகம் காட்டாமல் கனிவுடன் நோக்கி நல்வழிகாட்டி விதிமுறைக்குத் தக்கதை மட்டும் செய்து விடுப்பின் அவரும் மீளப் புறம்பான நோக்கில் வாரார்.

"புறம்பான செயலுக்கு இவர் இடம் தரார். நேரிய வகைக்கு நொடிப்போதும் தாழாமல், எந்த எதிர் பார்ப்பும், எவர் பரிந்துரையும் இல்லாமல் செய்வார்" என்னும் எண்ணம் பொதுமக்களுக்கு உண்டாகிவிட்டால் அவ்வலுவலர் குலதெய்வமாகவே காட்சி தருவார்.

அரசு தரும் உதவி இது. இதனொடு ஊர்மக்களும் ஒன்றாக நின்று உதவினால் அரிய பெரிய பணிகளைச் செய்துவிடலாம்! ஆற்றின் கரை மேம்பாடு சாலை ஆக்கம், கால்வாய்த் தூர்வார்தல், மதுவொழிப்பு, கல்வி வளர்ச்சி, தொழில்வாய்ப்பு, சிறுசிறு பிணக்குகளைத் தீர்த்தல் என்பவற்றை வாய்த்த அளவால் செய்தால் எடுத்துக் காட்டான அலுவலராக அவர் நிறைவு கொள்வதோடு, ஊரும் எடுத்துக் காட்டான ஊராய், அண்டை அயல் ஊர்களை ஏறிட்டுப் பார்க்க வைக்கும். தாம் இடம் மாறிச் சென்றாலும், வரும் அலுவலர்க்கு வேண்டும் வழிகாட்டலைச் செய்தால் அவரும் முன்னவர் வழியில் நடையிட்டுப் பெருமைபெறுவார்.

தம் கைப்பொருளை இழந்தும் தொண்டு செய்யும் நல்லவர்கள் இல்லாமல் இல்லையே! அவர்களை நோக்க, சம்பளம் பெற்றுக் கொண்டு தொண்டு செய்தல் கரும்பு தின்னக்கூலி தருவதுபோல் ஆகி இன்பம் செய்யும் அல்லவா?

எத்தகைய செல்வர், பதவியர், கல்வியர் – ஊரில் இருந்தாலும் ஊருக்கு முதன்மைப் பட்டவராக, ஊராளி விடுதலைக்கு முன்னர் இருந்ததை யான் தெளிவாக அறிவேன். ஆசிரியர்க்கு இருந்த மதிப்பும், ஊராளிக்கு இருந்த மதிப்பும் குறைந்து போக எவரும் காரணம் – காரணர் – அல்லர். அவர்களே காரணர்! இன்றும் அந்தப் பெருமைநிலையரை அங்கொருவரும் இங்கொருவருமாகக் காணவே முடிகிறது. எவர் ஆண்டாலும் 'அவர் அவராகவே' இருக்கும் நேர்மைப் பிறவியர்! பண்பாட்டுப் பிறவியர்! தூய்மைப் பிறவியர்! கறையிலாக் கையர்! களங்கமிலா நெஞ்சர்! எனப் பாராட்டப்படுபவர் இன்றும் உளர்.

பணிஓய்வு பெறுவார்– பெற்றார் –தம்வாழ்வை எவ்வாறு சிறப்பச் செய்ய வேண்டும் என்பதை ஆசிரியர் தொல்காப்பியர் கூறியுள்ளார். அது

"ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்

ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்" என்பது (813)

–ஓய்தல் என்பது செயலற்று – சோர்வுற்று – இருத்தல் இல்லை.

"ஓய்தல் ஆய்தல்"

கீரை ஆய்தல், கொத்தவரை ஆய்தல் என்பவை மக்கள் வழக்கில் உள்ளவை; எவரும் அறிந்தவை.

கீரை பறிக்கும் போதே புல்லும் களைச் செடியும் சேராமல் பார்த்தே பறிக்கிறோம்; அறுக்கிறோம். பின்னரும் முற்றியது பழுத்தது அழுகியது பூச்சி பற்றியது கதிர்விட்டது என்பவற்றைப் பார்த்துப் பார்த்து அகற்றுகிறோம். ஒரு முறைக்குப் பலமுறை கழுவியே தொடுகறி, விடுகறி என ஆக்குகிறோம். சுருங்கச் சொன்னால்,

"தள்ளுவன தள்ளிக் கொள்ளுவன கொள்ளல்" என்பதே ஆய்தலாம்.

ஆய்ந்ததன் பின்னும் ஏதேனும் தூசி, தும்பு ஒட்டியுள்ளதா எனப் பார்த்து அகற்றல் ஆராய்தல் ஆகும். இதுபோல்வதே கொத்தவரை ஆய்தலும்.

இவ்வழியில் நூலாய்தல் மேலாய்தல் நிகழும், நம்மையும் நாம் ஆற்றிய அலுவலையும் மீள ஆய்தல் வேண்டும்.

"செய்த நல்லவை எவை?" அவற்றை மேலும் நல்லவையாக எப்படிச் செய்திருக்கலாம்" என நம்மைநாம் ஆய்தல்-ஆராய்தல்-வேண்டும். நாம் செய்த தவறுகள் எவை? அறியாத் தவறு, அறிந்த தவறு என எவ்வெவற்றைச் செய்துள்ளோம். இவற்றை எப்படித் தவறு இல்லாமல் செய்திருக்கலாம். இத்தவறுகளால் நமக்கு ஏற்பட்ட இடம் என்ன? பிறர்க்கு உண்டாகிய இடர் என்ன? அலுவலுக்கு ஏற்பட்ட பழியென்ன? இவற்றை எண்ணிப் பார்த்து, பின்னே பணிக்கு வருவார் கொள்ளுவன கொள்ளவும், தள்ளுவன தள்ளவும் வழிகாட்டலாம். நாம் கொண்ட நலத்தை அவர் அடையவும்; நாம் கொண்ட பொலத்தை அவர் அடையாமல் இருக்கவும் வழிகாட்டியாக இருக்கும், இஃது ஆய்தல் என்பதாம்.

**நிழத்தல்**

நிழற்றல் த நிழத்தல். 'குடை நிழற்றுதல்' என்பது அரசாட்சி. நிழலுக்காக அமைந்த குடை அன்று அது. மக்கள் மனத்துயர் அடையாமல் காவல் செய்வதன் அடையாளம் அது. எங்கும் பரவிய நலத்தின் அடையாளம் அது.

அலுவலர் தாம் தம்மை ஆய்ந்து பெற்ற நலம் - பொலம் - ஆகியவற்றைத் தமக்குப் பின்வரும் அலுவலர் அனைவரும் அறியும் வகையில், தங்கள் கூட்டத்தின் வழியே உரையாற்றியும் உரையாடியும் பரப்புதல் வேண்டும். இச்செயல் அவர் பணியில் மேடேறவும், குழியுள் வீழாமல் இருக்கவும் வழிகாட்டும். ஆதலால் ஆய்தலிலும் நுண்ணியது நிழத்தல் ஆகும்.

**சாஅய்**

பணியைக் குறைநிறை ஆய்ந்தார்; அதைப் பரப்பினார். அவற்றைச் செய்ய முடியாத அளவில் முதுமையுற்றார். ஊரூர் அலைந்து உண்மையைப் பரப்ப இயலவில்லை; என் செய்வது எனின் முன்னவற்றினும் நுண்ணிய செயலுண்டு. அது தாம் சொல்ல நினைக்கும் கருத்துகளை எல்லாம், என்றும் போகாவகையிலும், எல்லார்க்கும் நிலைத்த பயனாகும் வகையிலும் எழுத்து வடிவில் பதிவு செய்தலும், நூலாக்கம் புரிதலும் வேண்டும் என்பதாம்.

சாஅய் (சாய்) என்பது, குடத்தில் இருக்கும் நீரைச் சாய்த்துக் குவளையில் நிரப்புவது போலவும், தேனைப் புட்டியில் இருந்து சாய்த்துச் சுவைப்பது போலவும் எண்ணத்தை எழுத்தாக வடிப்பதாம்.

இவை ஒன்றன்மேல் ஒன்று நுண்மையானதும் பயன்மிக்கதுமாம் என்பதாம்.

ஓய்வு பெற்றபின் இவற்றைத் தவறாது முறையே செய்தால், தாம் செய்த பணியைச் தொண்டாக்கிய பெருமைஉண்டாகும். பணிக்கு வருவார் தம் பட்டறிவோடு இப்பட்டறிந்தார் தந்த பட்டறிவும் சேர, இரட்டை நலமாய்ப்பணி சிறக்கச் செய்யவும் வாய்க்கும்.

# 4. வள்ளுவர் காட்டும் குடும்பம்

அறத்தை வலியுறுத்துகிறார் திருவள்ளுவர். "மனத்தில் மாசு இல்லாமையே அறம்" என அறத்தின் இலக்கணம் கூறுகிறார் (34)

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" (49) என்றும்,

"அறத்தான் வருவதே இன்பம்" (39) என்றும் தெளிவு செய்கிறார்.

இல்லறம் கொண்ட தலைவன் தலைவியருள் உயர்வு தாழ்வு இல்லை. ஒருவருக்கு ஒருவர் துணை; இணை!

அதனால் **'வாழ்க்கைத் துணை நலம்'** என அதிகாரப் பெயரிட்டார்.

இல்லத்தை ஆள்பவள், **இல்லாள்**

மனையை ஆள்பவள், **மனையாள்**

ஆதலால் வீட்டு உரிமையில் கணவனினும் மனைவிக்கே ஆட்சியுரிமைமிகுதியாம்.

நாட்டுக்கே, **"தாய் நாடு"** என்பது பெயர்.

மொழிக்குத், **"தாய் மொழி"** என்பது பெயர்.

தெய்வத்திற்குத், **"தாய்த் தெய்வம்"** என்பது பெயர்.

சொத்துக்குத் **"தாயம்"** என்பது பெயர்

வீட்டு வாழ்வில் கணவன் மனைவிக்குத் துணையாக இருக்க வேண்டும் என்பதால் இல்வாழ்க்கை முதல் இரண்டு குறள்களிலும் **"இல்வாழ்வான் என்பான் துணை"** என்றார். (41, 42)

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் **நல்லாற்றின் நின்ற துணை"**

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும் **இல்வாழ்வான் என்பான் துணை"** என்பவை அவை,

**இயல்புடைய மூவர் எவர்?**

பிறக்கும்போதே எவரும் **"இன்னார் வயிற்றில் பிறப்போம்"** என அறியார்.

பெறுபவரும், "இன்னாரைப் பெறுவோம்" என அறியார்.

பிறக்கும் போதே "இன்னாரை மணப்பேன்" என எந்தப் பெண்ணும் அறியாள்; எந்த ஆணும் அறியான்.

காதல் தொடக்கத்தை **இயற்கைப் புணர்ச்சி** கடவுட் புணர்ச்சி, தெய்வப் புணர்ச்சி, ஊழால் கூடுதல் என வழங்கினர்.

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"

என்றார் தொல்காப்பியர் (1039). இயல்பால் காதல் கொண்டு மணம்புரிந்த பெற்றோரும், இயல்பால் காதல் கொண்டு மணம் புரியும் மணமக்களும் ஆகிய இந்நால்வருள், இல்வாழ்வு மேற்கொள்ளும் கணவன், மற்றை மூவரையும் காலமெல்லாம் காக்கும் நிலைபெற்ற துணையாவான் என்கிறார்.

கோவலன் கண்ணகியிடம், **"என்பெற்றோர்க்குச்** செய்யும் கடமையையும் செய்யத் தவறினேன். **உனக்குச்** செய்ய வேண்டும் கடமையையும் செய்யத் தவறினேன்" என்பதால், பெற்றோரும் மனைவியுமே இயல்புடைய மூவர் என்பது தெளிவாம்.

மாதவி கோவலனுக்கு எழுதிய கடிதத்திலும் இம்மூவரையும் குறிக்கிறாள்.

முன்னது,

**"இருமுது குரவர்** ஏவலும் பிழைத்தேன்

**சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்"** என்பது.

பின்னது,

**"குரவர் பணி அன்றியும் குலப்பிறப்பாட்டியொடு**

**இரவிடைக் கழிதற்கு என்னோ பிழைப்பறியாது "** என்பது.

ஆதலால், பெற்றோரையும் மனைவியையும் காக்க வேண்டியது கணவன் கடமையாம்.

அக்காலம் கணவன் வருவாயை மட்டுமே நம்பியிருந்த காலம். இப்பொழுது மகளிரும் ஆடவர்களைப் போல, எல்லாப் பொறுப்புகளிலும் தொழில்களிலும் ஈடுபடுவதால் இருவரும் குடும்பப் பொறுப்பிலும், முதியரைப் பேணலிலும், கூடிச் சமைத்தலிலும், பிள்ளைகளைப் பேணி வளர்த்தலிலும், ஒத்த பங்குடையவர்களாகவே உளர். எனினும் மகளிர்க்கு இயற்கையே குடும்பக் கடமைகளில் மிகுதியான பங்கை வழங்கியுள்ளது என்பது உண்மை நிலையாம்! வெளிக் கடமைகளிலும் கணவனுக்குத் தக்க துணையாக இருப்பது மிகச் சிறப்பாகும். தக்க கணவனும் தக்க மனைவியும் கூடி வாழும் வாழ்வே தெய்வநிலை வாழ்வு என்பதும், வீடு பேற்று வாழ்வு என்பதும், அமிழ்த நிலைய வாழ்வு என்பதும், வானத்தை நோக்கிய அளவில் உழவனுக்கு மழைபொழியும் தேனினும் இனிய வாழ்வு என்பதும் வள்ளுவம் விரித்துக் கூறுவதாம்.

ஓரறிவு உயிரியாம் புல்லும், தன் இனத்தைப் பெருக்கும் இயல்பை, இயற்கையே வழங்கியுள்ளது. அவ்வாறே ஆரறிவு உயிரியாம் மாந்தரும் இயற்கை உந்துதலால் தன் இனம் பெருக்குதற்கும் தக்கோராக வளர்த்து உலகம் பயன்பெறச் செய்தற்கும் கண்ட வழியே இல்லற வாழ்வாம்.

எத்துறவர் எனினும், **அவர் இல்லற வாணர்தம் வழிவந்தவரே** ஆவர்.

பறக்க வலிமைவந்தால் பறவைகள் பறந்து போய்விடுகின்றன. நடக்கத்திறம் வந்ததும் விலங்குகள் ஒரு குறித்த கால அளவில் தாயை விட்டு அகன்று போய்விடுகின்றன. மாந்தர் இனமோ மன அறிவு வாய்ந்த இனம் உறவுமுறை கொண்டொழுகும் இனம் தங்கள் எண்ணங்களில் மாறுபாடும் வேறுபாடும் கொண்டாலும் விடுதல் அறியா உறவு கொண்ட வரலாறமைந்த இனம். அதனால் குடி என்றும், குடும்பம் என்றும், இல்லறம் என்றும், இல்லறத் துறவு என்றும் கொண்டு வாழும் தகவுடையதாயிற்று.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு."

என்ற வள்ளுவம்,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

என்று மக்கட் பேற்றைத் தொடர்ந்தது.

இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், மக்கட் பேறு என வரிசைப்படுத்திக் கூறி, அன்புடைமைமுதல் புகழ் இறுதியாக இல்லறம் உரைத்தது.

இல்லறக் கடன்களையும் இல்லறப் பேறாம் புகழையும் கூறிமுடிந்தபின், அவ்வில்லறம் குடும்ப அளவில் நில்லாமல் உலகப் பேறாகவும், உயிர்கள் அனைத்தின் மேலும் பரவிச் செல்லும் அருள் வாழ்வாகிய ஆன்ம நேய வாழ்வாகிப் பேராப்பெருநிலை பெறவேண்டும் என்பதால் அவாவறுத்தலில் நிறைவு செய்து உலகத்து இயற்கையாம் ஊழை நிலைப்படுத்தி நிறைவு செய்தது அறத்துப்பால் நிறைவும் பொருட்பால் தொடக்கமும் போல அமைந்தது அது.

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்."

என ஆள்வோர்க்கு உரைத்தது.

இனிக் குடும்ப அறப்பேறாம் மக்கட்பேற்று மாண்பு உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதற்கு நான்கு படிமானங்களை அமைக்கிறார்.

பிறப்பவர் அனைவரும் மக்கள் அல்லர்!
மக்களே போல்வார் உளர்!
உறுப்பால் ஒத்து மக்களொடு ஒவ்வாதாரும் உளர்!
மூச்சுவிட்டுக் கொண்டிருக்க மட்டுமே
உள்ளாரும் உளர்!
ஒருபொழுதும் வாழ்வது என்ன என்பதை
அறியாப் பிறவியரும் உளர்!
மாந்தராகப் பிறந்தாலும் விலங்காக
கொடுவிலங்காகத் திரிவாரும் உளர்!

அறியவேண்டியவற்றை எல்லாம் அறிந்து வாழ வேண்டிய முறைப்படி வாழ்பவரே நன்மக்கள்! அத்தகைய மக்கட் பேறே, மக்கட் பேறு என்பது அறிவு அறிந்த மக்கள், கண்மூடியாக இரார். எதையும் நம்புவராக இரார். உண்மைகண்டு அறிவார். மற்றை உயிர்களின் துயர்களையும் உணர்ந்து இயன்றவாறு தீர்க்க முயல்வார்! சிலர் அறிவாளராக – திறமிக்காராக துறை வல்லாராக – இருப்பார். ஆனால், பழிபாவங்களுக்கு அஞ்சாக் கொடியராக வஞ்சராக தம்நலத்தராக இருப்பர். அவ்வாறு இல்லாத பழியற்ற பண்புடையவராக இருப்பவரே மக்களாம் என்கிறார்.

மக்களாகப் பிறந்தார், அறிவறிந்தாராகவும் இருந்தார், பழியில்லாப் பண்புடையவராகவும் அமைந்தார் எனில், போதுமா எனின், போதாது என்கிறார்.

தம்மைப் பேணுகிறார்; குடும்பத்தைப் பேணுகிறார்; பழி செய்யாமல் இருக்கிறார்; ஆனால் அவர்க்கு இவ்வுலகம் எத்தனை எத்தனை நலங்களைச் செய்துள்ளது அதனை எண்ணிப் பார்க்க வேண்டும் அல்லவா!

நாம் உண்ணும் உணவு, உடுக்கும் உடை, உறையும் வீடு இவையெல்லாம் நாமேசெய்து கொண்டவையா? எத்தனை எத்தனை பேர் உழைப்பு! அவ்வுழைப்புக்கு நாம் செய்ய வேண்டுவதென்ன?

நோய்வந்தால் மருந்து! நெருக்கடி வந்தால் உதவி! பகை வந்தால் பாதுகாப்பு! இப்படியெல்லாம் நமக்கு வாய்ப்புச் செய்தவர்களைப் போல நாம் செய்யவேண்டுவது என்ன? உலக நலத்துக்காகச் செய்ய வேண்டியவற்றைச் செய்ய வேண்டும் அல்லவா? ஆதலால், பெற்றவர் தம் மக்களை அறிவாலும் பண்பாலும் சிறக்கச் செய்வதோடு உலகுக்காக வாழும் நன்மக்களாக விளங்கச் செய்யவும் வேண்டும்!

**அறிவர், அறவர், அருளர், துறவர், தொண்டர், புதுப்புனைவர்** என்பார் போல் தம்மக்கள் விளங்கி நலம் செய்யவும் வழிகாட்ட வேண்டும் என்கிறார்.

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை **அறிவறிந்த**
**மக்கட்பே** றல்ல பிற" (61)

"எழுபிறப்பும் தீயவை தீண்டா **பழிபிறங்காப்**
**பண்புடை மக்கட்** பெறின்" (62)

"தந்தை மகற் காற்றும் நன்றி **அவையத்து**
**முந்தி யிருப்பச் செயல்**" (67)

"தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது" (68)

என்பவற்றைக் காண்க.

குடும்ப வாழ்வு சிறக்க அடிப்படை அன்பு.

'நான்' என இருந்தவன் அவன்!

'நான்' என இருந்தவள் அவள்!

இப்பொழுது நாம் ஆகிவிட்டனர்.

தனக்கு உணவு, தனக்கு உடை, தனக்கு உறைவிடம், தனக்கு உறவு என்று இருந்தவர்கள் தமக்கு உணவு, தமக்கு உடை, தமக்கு உறைவிடம், தமக்கு உறவு என ஆகிவிட்டனர். பின்னர்த் 'தம்' என மாறலாயினர். 'தம் மக்கள்', 'தம் மக்கள் வளர்ப்பு', என விரிந்து மூவர், நால்வர் என ஆயினர்! இவை அன்பின் விரிநிலை! ஒரு பழம் நீர்நிலையில் விழுந்தால் ஓர் அலை – சிறுவட்டம், அப்படியே விரிவட்டம், நீர்நிலை முழுதும் வட்டம் ஆகிவிடுவதுபோல் விரிவது அன்பு!

உற்றார், உறவு, சுற்றம், நட்பு, விருந்து என விரிகின்றது. தம்மை மட்டும் கருதாமல் தம் மக்களையும் கொண்டவர்களையும், கொடுத்தவர்களையும், அண்டியவர்களையும் அடுத்தவர்களையும் அரவணைக்கவும், அவர்கள் அரவணைப்புக்கு ஆளாகவும் செய்கிறது.

வறுமையால் வாடுபவர், வறுமைக்கு வாடி வீடு விட்டு வெளியேறுபவர், வழிப்போக்கில் வருபவர், தொண்டுக்காக வாழும் துறவர் என வருவார்க்கு உணவு முதல் இயன்ற உதவிபுரிதல் இல்வாழ்வுக் கடமையும் பிறவிப் பயனும் ஆகின்றன.

விருந்தினரைப் பேணலில் பெரும்பயன் உண்டு. நல்லவரும் – தக்கவரும் – விருந்தினராக வரும்போது, குடும்பத்தில் இருந்த சிறிய இடை வெளியாகிய சினம் வருத்தம் என்பவை, அவர்களைப் பேண ஒருப்படுவதாலும் அவர்கள் நல்லுரையாலும் தீர்ந்து போகின்றன. இதனைத் தொல்காப்பியர்,

"விருந்துகண்டு ஒளித்த ஊடல்" என்பார்!

குடும்பம் என ஏற்பட்ட அளவில், அதற்குமுன் ஊர் சுற்றியாக இருந்தவனும், வேண்டாத பொழுதுபோக்குக் கொண்டவனும், வேலை –பணி –அலுவல் முடித்தவுடன் வீட்டை நோக்கி வருவதற்கும், வெட்டிப்பொழுது போக்கைவிட்டு ஒழிப்பதற்கும், வீண் செலவுகளைத் தவிர்த்து வீட்டுக்கு வேண்டுவ செய்தற்குமாகிய கட்டொழுங்கைக் கொள்ள நேர்ந்து விடுகின்றது.

எதிர்காலத்தை எண்ணிச் **சிக்கனம்;** சேமிப்பு என வாழ வைக்கின்றது.

பிள்ளைகள் கல்வி, வேலை, திருமணம் என்பவற்றில் ஆர்வமும் அக்கறையும் கொள்ள நேர்ந்து விடுகின்றது. இவையெல்லாம் எவர்

தூண்டலும் வேண்டலும் இல்லாமல் இயல்பாக ஏற்படுகின்ற வாழ்வியல் அமைவுகளாம்.

பிள்ளைகள் வளர்ந்து – கல்வி பெற்று – வேலையுற்று – பொருள் தேடி வாழும் நிலை அடைந்து விடுகிறார்கள்! அவர்கள் வாழும் பக்குவம் அடைந்தும் விடுகிறார்கள். பெற்றோர்கள் பணியில் இருந்தால் அரசு கணக்குப்போல் ஓய்வும் தந்துவிடுகின்றது.

ஓய்வில் வீட்டில் அடைந்து – முடங்கிக் கிடத்தல் ஆகாது. அது தற்கேடாகும்!

தம் கடமையும், வீட்டுக் கடமையும் தக்க வகையில் செய்து முடித்தவர்கள், பொதுக் கடமைக்கு அல்லது தொண்டுக்குத் தம்மை ஆளாக்கிக் கொள்ள வேண்டும். அதுவே ஒருவர் பிறவிப் பயன். அதனை மேலே காண்போம்.

## 5. கூட்டுக் குடும்பம்

பருவகாலத்தில் **வேடந்தாங்கலுக்கு** மக்கள் ஏன் கூட்டம், கூட்டமாகப் போகிறார்கள்?

முன்னே பார்த்தோம் என்னாமல், பின்னேயும் விரும்பிப் பார்க்கச் செய்வது எது?

உலகப் பறவைகள் எல்லாமும் ஒருங்கே கூடும் களங்கமிலா - கறையிலா - பிணக்கு பிளவு இலா - ஒருமித்த காட்சியாய் உள்ளங் கொள்ளை கொள்ளும் காட்சியாக அமைவது இல்லையா அது?

வானிலே 'வண்ணமாலை' போல வரிசையாகப் போகும் 'பறவை வலசை' மண்ணகப் பார்வையை விண்ணகப் பார்வையாய் மாற்றி விடுகின்றது அல்லவா!

தமிழகக் கூட்டுக் குடும்ப வாழ்வுச் சிறப்பு தனிப் பெருமையது. அப்பெருமையை விளக்கிக் கொண்டே இருக்கும் சிறப்பு நம்மை விடவில்லை. நாம் விட்டு விட்டாலும், அது நம்மைவிடவில்லை! புரியாமல் கோயில் வழிபாடு செய்வதும், புரியாமல் இசை பாடுவதும், புரியாமல் வழக்காடுவதும், புரியாமல் கற்பதும் - வழக்கமும் வாழ்வும் ஆகிப்போகிப், பொருள் புரியாமல் பெயர் கொண்டு, புரியாச் சடங்காலேயே போய் முடிவது பெருமை என்னும் **கண்மூடியனுக்குப் புரியும் பேறுவாய்த்தால் அன்றிப் புகழ் வாழ்வு வரப்போவது இல்லை!**

**'பரம்பரை'** என்பதைக் கேளாதவர் - சொல்லாதவர் இல்லை. பரம்பரைப் புகழ்பேசாரும் இல்லை! எங்கள் பரம்பரை எப்படிப்பட்டது தெரியுமா? எனச் செருக்குவது வேறு! **'பரம்பரை'** என்பதன் பொருள் என்ன?

**'பெற்றவர்'** ஒருவரா? கருவைத் தந்த **தந்தையும்** அக்கருவை ஏற்று வயிறு வாய்த்து அக்கருவை உருவாக்கியும் திருவாக்கியும் தந்த ஆயாம் **தாயும்** கூடியவர் தாமே பெற்றவர்!

அப்பெற்றவரைப் பெற்றவர், பெயர்கள் **தாமே பாட்டன் பாட்டியர்!**

உழவனுக்கு வேண்டும் பருவத்துப் பாட்டம் பாட்டமாகப் பெய்யும் மழைபோல வளம் கொழிக்கத் தந்த கொடையாளர்களே, பாட்டன் பாட்டியர்.

**'தாதா'** என்றால் கொடையாளர் என்பதே பொருள். மணக்கொடை புரிய உரிமை கொண்டவர் – பேரன், பேர்த்தியர்க்கு மணம் செய்வித்த பெருமையர் அவர்.

பாட்டன் பாட்டியர்க்கு மூலமாக இருந்தவர் அல்லது பெற்றோர், **பூட்டன் பூட்டியர்.** பெட்டியைப் பூட்டிக் காக்கிறோம்; வீட்டைப் பூட்டிக் காக்கிறோம். கோட்டை கோயில்களையும் பூட்டிப் பாதுகாக்கின்றனர். அருவிலைப் பொருள்களைப் பூட்டிப் பூட்டிக் காப்பது போலக் குடும்பத்தைக் கட்டுக்காவலொடு காத்தவர் **பூட்டன் பூட்டியர்.**

அப்பூட்டன் பூட்டியரைப் பெற்றவர்கள் **ஓட்டன் ஓட்டியர்.**

உலக ஓட்டப் பந்தயம் முதல் உள்ளூர் ஓட்டப் பந்தயம் வரை உண்டு. இப்படி இந்த வரம்பில் ஓட வேண்டும் என விதிமுறை உண்டு. அதுபோல் இவ்வாறு வாழவேண்டும், இவை வாழ்வில் தலைக்காட்டக் கூடாதவை என ஒழுங்குமுறைகளை வகுத்து வாழவழி காட்டியவர் ஓட்டன் ஓட்டியர்.

ஓட்டன், ஓட்டியர்க்கு மேல் உறவு இல்லை என்றனர். ஏனெனில் 'மனிதர்க்கு வயது நூறல்லதில்லை' என்றனர்.

கண்ணகிக்கு வயது; 12 (ஈராறு ஆண்டு அகவையாள்)

கோவலனுக்கு வயது; 16 (ஈரெட்டாண்டு அகவையாள்)

இந்நாளில் இத்திருமணம் சட்டப்படி குற்றம்! எனக்கு, 1946 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 இல் திருமணம்! என் பிறந்த நாள் 1930 சனவரி 30 வயதைப் பார்த்துக் கொள்ளுங்கள்! 25.03.1948 இல் முதல் மகவு பிறந்தது.

இந்நாள் வழக்கப்படி ஆணுக்கு 24 வயது; பெண்ணுக்கு 20 வயது என்றாலும், ஆண் 96 ஆம் அகவையிலும் பெண் 80 அகவையிலும் ஓட்டன் ஓட்டி ஆகிவிடலாம் அல்லவா!

அதனால் நூறு வயதுக்குள் ஓட்டன் ஓட்டியர் ஆகிவிடலாம். ஆயினும், தமிழர் தம் உறவுமுறையை மேலும் வளர்த்தனர். **சேயோன் சேயோள் அல்லது, பழையன் பழையள்** என்றனர்.

இந்நான்கு தலைமுறைக்கும் அப்பால் இருந்த அனைவரையும் அம்முறையால் குறித்தனர். என்ன முந்தினாலும் அவர்களுக்கும் முந்திய ஆதிப்பெற்றோர் இருந்திருக்க வேண்டுமே! அவ்வாதிப் பெற்றோரே பரன்பரை என்பார். **பரன், அப்பன்; பரை, அம்மை.**

ஆதித் தந்தையும் தாயும் பரன்பரை (பரம்பரை) எனப்பட்டனர். (பரன்-தந்தை; பரை-தாய்) இதனை அறிந்து சொல்லவும் அறியாமல் போனோம் அல்லவா!

இம்முறைப் பெயர்கள் உலகமொழி எனப்படும் ஆங்கிலத்தில் உண்டா? ஏன் இல்லை! அங்குக் **கூட்டுக் குடும்பம் அரும்பவில்லை; அம்மொழியும், அயல்வழக்கும் தமிழ்நாட்டில் புகுந்து ஆட்டம் போட்டமை, கூட்டுக் குடும்ப வாழ்வைச் சிதைத்தது. குடும்ப ஒருமையையும் குலைத்தது.** புதுமைப் போலிமையும் போக்கடித்தது!

முன்னவர்களை ஒளி வடிவாக வழிபட்ட வழக்கமே, 'குடும்ப விளக்கு' ஏற்றும் வழக்கும் ஆகிவிட்டது.

இனி, மக்களின் மக்கள்,

**பேரன் பேர்த்தியர்!**

பாட்டன் பாட்டி பெயர்களை வைத்தலால் பெற்ற பெயர்கள். பேரன் பேர்த்தியர் மக்கள்,

**கொள்ளுப் பேரன் கொள்ளுப் பேர்த்தி;**
**எள்ளுப் பேரன் எள்ளுப் பேர்த்தி**

என்பார். ஒன்பது வழிமுறை காணப்படவில்லையா?

**கூட்டுக் குடும்பம் என்பது காவல் தெய்வம் குடியிருக்கும் வீடு!**

கணவன் மனைவி, அவர்கள் மக்கள் ஒரு, 'தலைக்கட்டு'! பல தலைக்கட்டுகளுக்கும் தனித்தனி உறைவிடங்கள் இருக்கும். அதற்கு **'வளசல்'** என்பது பெயர்.

குடி, குடில், குடிசை, குடும்பம், குடியிருப்பு, குடம்பை என்பனவும்,

வளை, வளைவு, வளையம், வளையல், வளைசல் என்பனவும் வட்டமானவை என்னும் பொருளனவே.

முதியவர்களும் ஓய்ந்திரார். ஆண்களும் பெண்களும் வேலைகளை முறைபோட்டுக் கொண்டு செய்வர்.

சோறு முதலாம் சமையலுக்குப் பல அடுப்புகள் இருக்கும். பொதுவாக ஆக்குவர். அவரவர் குடும்பத்துக்குத் தக வேண்டும் உணவை எடுத்துக் கொண்டு தம் அறைக்குச் செல்வர்.

வேலைக்காரர்களுக்கும் வேண்டும் உணவு வழங்குவர். எல்லாருக்கும் பாகுபாடு இல்லாத உணவு. கலப்பு வகை உணவு, நோயர், குழந்தையர்க்கு வேண்டும் உணவு. பால்மாடுகள் பல இருக்கும். உழவு மாடுகளும் பெருக இருக்கும். ஓர் ஊர் எனவே எண்ணத் தோன்றும்.

1951 ஆம் ஆண்டில் யான் கரிவலம்வந்தநல்லூர் என்னும் ஊரில் பணி செய்தேன். அவ்வூர்க்கு 2 கல் தொலைவில் காவடிச் சிந்து பாடிய அண்ணாமலையார் வாழ்ந்த சென்னிகுளம். அதற்குக் கிழக்கே இரண்டு கல் தொலைவில் கீழ வயலி மேல வயலி என இரண்டு ஊர்கள் உள்ளன.

மேல வயலியில் இருந்த கூட்டுக் குடும்பத்தில் 13 அடுப்புகள்! ஏறத்தாழ 200 பேர்கள். மூன்று தலைமுறைகளுக்கு முன்னே வாழ்ந்த பெரியவர், "இந்த வீட்டில் சொத்துப் பிரிவினையும் இல்லை! சோற்றுப் பிரிவினையும் இல்லை" என ஆவணம் எழுதி வைத்திருந்ததால், அவ்வாணைப்படியே நடைபெற்றது.

மக்களும் பேரர்களும் பெரியவர்களை மதித்து நடந்தனர். பெரியவர்கள் குழந்தைகள் முதல் அனைவருக்கும் நல்ல பழக்கங்களைக் காட்டி வாழ்ந்தனர்.

அவ்வளவு பெரிய குடும்பம் இல்லை என்றாலும், பெற்றோரைத் தனிமைப்படுத்தாத மக்களும் பேரர்களும்; பிள்ளைகளையும் பேரர்களையும் துயரப்படுத்தி சுமையாக எண்ணவைக்காத பெற்றோர்களும் அமைந்த குடும்பங்களுமாக இருந்தால் இன்பமானதாம்.

இளையவர்களுக்குப் பாதுகாப்பு; முதியவர்களுக்கும் தனிமைத் துயர் இல்லாமை ஏற்படும்! முதியோர் இல்லங்களையும் ஏதிலியர் இல்லங்களையும் முதியரும் இளையரும் தேடாதநிலை உண்டாகும். வீட்டுக்கு நல்ல பாதுகாப்பாகவும் இருக்கும்!

ஒற்றையாய் இரட்டையாய் நிற்கும் பனைமரத்தினும் ஓராலமரம் உயர்ந்த தோற்றம் தரும் அல்லவா! எவ்வளவு வளம் இருந்தாலும் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து உதவ, வீட்டிலேயே ஆள்இருப்பது எவ்வளவு நலம்.

முதுமையர் வீட்டில் இருப்பதால் நமக்கு எவ்வளவோ நன்மை என எண்ணுமாறு முதியவர்கள் நடந்து கொள்ள வேண்டும். முதியவர்கள் இளையவர்களினும் பக்குவப்பட்டவர்கள். கால இயல்பு அறிந்தவர்கள்; பட்டறிவு மிக்கவர்கள்! பெரிதாக எதையும் எதிர்பாராத எளிமை

நாட்டமுடையவர்கள். மக்கள் பேரர்கள் குறைகளைப் பெரிதுபடுத்தாதவர்கள் என இருந்தால், குறையுடையவர்களாக இளையவர்கள் இருந்தாலும், சிந்திக்கத் தொடங்குவர். இளையவர்களின் நல்ல பண்புகளைப் பாராட்டுங்கள்! "வேண்டாமை விழுமிய செல்வம்" எனக் கருதுங்கள்! உங்களுக்கு வேண்டிய எல்லாம் தட்டாமல் வரும்!

சரிவராதா? நீங்கள் தனியாள்களா? உங்களைப் போல்வாரைக் கூட்டாகக் கொண்டு உலாவுங்கள் உரையாடுங்கள்.

இதோ ஒரு நிகழ்ச்சி.

ஒரு பூங்கா! நான்கு முதியவர்கள், வழக்கம் போல் சந்திப்பர்! உரையாடுவார். ஒரு நாள் ஒரு பெரியவர் தமக்குள்ள கசப்பை வெளியிட்டார்.

"என் மகன் வீட்டில் இல்லை என்றால், என்னை என் மருமகள் மானம் கெடப்பேசுகிறாள்". எங்காவது போய்த் தொலையேன். இங்கே கிடந்து எங்கள் உயிரை ஏன் வாங்குகிறாய் என்கிறாள்! பொறுக்க முடியவில்லை என்றார்.

**இன்னொருவர் சொன்னார்**

உமக்கென்ன? உம் மருமகள் தானே சொன்னாள். **என் மகனே** என்னை வாய்க்கு வந்தவாறு பேசுகிறான். வெளியே சொன்னால் வெட்கக்கேடு என்று பொறுத்துக் கொண்டிருக்கிறேன். அவன் இப்படிப் பட்டவன் இல்லை. ஒரு நாள் மருமகள் என்மகனிடம் "உமக்குச் சூடு சொரணை இருக்கிறதா? அந்தக் கிழத்தை வைத்துக் கொண்டு அழமுடியாது என்னால்" என்பதைக் கேட்டேன் "இன்னும் அங்கே இருக்க வேண்டுமா?" என்றார்.

**வேறொருவர் சொன்னார்**

"உம்மை மருமகள் திட்டுகிறாள். உம்மை மகனும் மருமகளும் திட்டுகின்றனர். என்னை **என் மனைவியே** பாடாய்ப் படுத்துகிறாள். வேலையில் இருந்து கைநிறையச் சம்பளம் வந்தபோது, அங்கே இங்கே என்று தன்போக்கில் சுற்றினாள்! இப்பொழுது அந்த வருமானம் இல்லை! வீட்டோடும் அடைந்து கிடக்கிறேன்! அதனால் கடுப்பாகிவிட்டாள். நேற்று இரவு பழைய கஞ்சியே இருந்தது. இதைக் குடிக்கலாம் என்று போனால் **"நீர்குடித்துவிட்டால் நாய்க்கு என்ன செய்வது?"** என்று சொன்னாள். நொந்து போனேன்! **"இன்னும் உயிரோடு இருக்க வேண்டுமா?" என நினைக்கிறேன்** என்றார்.

**நாலாமாவர் சொன்னார்**

"உங்கள் பாடுகளைக் கேட்டேன். நாம் நான்கு பேரும் நண்பர்கள் தாம். ஆனால், இதுவரை இப்படி வாய்விட்டு பேசவில்லை! என் மகன் பத்து வயதிலேயே தாயை இழந்தவன். நானே தாயும் தந்தையுமாக இருந்து நல்ல படிப்பாளி ஆக்கினேன். அவனும் திறமையானவன் தான். அமெரிக்காவில் வேலைவாய்ப்புக் கிடைத்துப் போனான். போனபின் மாதத்துக்கு ஒன்றிரண்டுமுறை பேசுவான். பணமும் அனுப்புவான். ஆனால், இப்பொழுது எந்தப் பேச்சும் இல்லை! பணமும் இல்லை! அங்கேயே ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டு பிள்ளைகுட்டியோடு தங்கிவிட்டானாம். அங்கிருந்து வந்தவர்கள் சொல்லக் கேட்டேன். நான் ஒற்றைக் கட்டையாய் கடையில் சாப்பிட்டுக் கொண்டு காலம் தள்ளுகிறேன்" என்றார்.

**பூங்காவைக் கூட்டிக் கொண்டிருந்த ஒரு முதியவள்** அருகில் வந்தாள். "என் வேலையோடு உங்கள் பேச்சுகளைக் கேட்டுக் கொண்டிருந்தேன். உங்கள் துயரங்களுக்காக வருத்தப்படுகிறேன்.

நான் தனியாள் தான். எனக்கு ஒரு வீடும் திண்ணையும் உண்டு. எனக்குச் சமைக்கிறேன். **ஏன் நாம் ஐந்து பேரும், ஒரு தாய் பெற்ற பிள்ளைகளாக ஒரு வீட்டிலேயே சமைத்துச் சாப்பிடலாமே** ஐந்து பேர்க்கும் என்ன பெரிய அடுப்பா, துடுப்பா? கொஞ்சம் பெரிய பானையில் சமைத்தால் போதுமே" என்றாள்.

நான்கு பேரும் ஒன்றாகக் கையெடுத்து வணங்கினர். "இந்த ஏழையின் சொல்லை உடனே ஏற்றீர்களே! உங்களைத் தான் வணங்க வேண்டும்" என்றாள்.

ஐந்து பேரும், காலுக்கும் கையிற்கும் **ஐந்தைந்து விரல்களைத் தந்த இயற்கையை** எண்ணிக் கொண்டு கைகளை வீசி நடையிட்டனர்!

இதுவும் ஒருவகையில் **கூட்டுக் குடும்பம் தானே!**

**உள்ளம் விரிந்தால் உலகெலாம் சொந்தம்!**

**உள்ளம் சிறுத்தால் உறவும் பகையே!**

## 6. இல்லறத் துறவு அல்லது மணிவிழா

மணிமேகலையார், குமரகுருபரர், மெய்கண்டார்
போன்றவர் பிறவித் துறவர்.
வள்ளலார், சூழல் வலுவால் மணங்கொண்டாலும்
மணந்த நாளே துறவானவர்.
இளம் பருவத்திலேயே அரசியல் முறைகாக்க
ஆணையிட்டுத் துறந்தவர் இளங்கோ!
விவேகானந்தர், இறைநிலைக் குருவர் வழிகண்டு
துறவரானவர்.
புத்தர், சாக்கியர் கோலியர் ஆயோர் இட்ட கால்வாய்த்
தகராற்றால் துறந்தவர்.

இவர்கள் விதிவிலக்காக அமைந்த பெருமையர். முறையாக மாந்தப் பிறப்பினர் அனைவரும் கொள்ள வேண்டியது இல்லறத் துறவு. அதனை, "அருளொடு புணர்ந்த அகற்சி" என்று கூறிய தொல்காப்பியர் விளக்கமாகவும் கூறினார். அதன் மேல்விளக்கமாக அமைந்ததே திருக்குறள் துறவற இயல்.

முதற்கண் தொல்காப்பியர் கூறுவதைக் காண்போம். கணவன் மனைவியர் தம் குடும்பக் கடமைகளைக் குறைவறச் செய்து முடித்துவிட்டனர். மக்கள் எதிர்கால நலத்துக்கு ஆவனவும் செய்து விட்டனர். அவர்கள், தாமே நல்வாழ்வு வாழத் தக்க வகைகளையும் செய்துவிட்டனர். இனி அவர்கள் குடும்பத்துப் பொறுப்பை மக்களிடம் ஒப்படைத்துவிட்டு அவர்களுக்கு வேண்டும் அளவால் வழிகாட்டுபவராக மட்டும் இருத்தலே கடமையாம்.

கடலில் வரும் கப்பலுக்குக் கரையில் இருந்து வழிகாட்டும் கலங்கரை விளக்குப் போல இருத்தலேயாம்.

முக்கால் வண்டி உருட்டிய பருவம் வேறு;

இயங்கிகளை இயக்கிய பருவம் வேறு;

இயங்கிகளைச் செவ்வையாக மக்கள் இயக்குவதைக் கண்டு மகிழும் பருவத்திற்கு வந்தமையே 'மணிவிழா' என்பதாம்.

பட்டை தீட்டி ஒளியூட்டப்பட்ட மணியாக விளங்கும் நிலை அது.

கண்மூடி வழக்கத்தால் 'அறுபதாம் கலியாணம்' எனப் பெயரிட்டு, தாலி கட்டி; அதனைப் பூட்டி, ஊஞ்சல் ஆட்டி-மீள் மணமக்கள் ஆக்குதல்! தெய்வங்களுக்கே ஆண்டு தோறும் மணம் செய்யும் வேடிக்கை உலகில், இது ஒன்றும் வியப்பில்லை!

மணிவிழா என்பது அறுபதாம் அகவை நிறைவு அடையாளம். குடும்பப் பொறுப்பை மக்களிடம் ஒப்படைத்து அவர்கள் குடும்பம் நடத்தும் பாங்கைக் கண்டு மகிழப் போகும் விழா! ஆண்ட அரசன், ஆளவரும் இளவரசுக்கு முடிசூட்டி, தன் பாரத்தை இறக்குவது போன்ற விழா!

மக்கள் மகிழ, சுற்றம் சூழ, உற்றார் உறவு பாராட்ட, அன்பு நண்பு கொண்டாட, அவர்கள் அனைவருக்கும் 'குருவர்' போலவும், இறைநிலையர் போலவும் வாழ்த்தும் வரப்பேறும் வழங்கும் விழா அதுவாம்.

வீட்டை விட்டுப் போவதோ, உறவை விட்டு ஒதுங்குவதோ, துறவுக் கோலமெனக் கொள்வதோ இல்லாத விழா! கணவனும் மனைவியும் பொதுக் கடமையும், உலகத் தொண்டும் செய்து பிறவிப் பயனை அடைய நுழைவாயிலாக அமைந்ததே மணி விழாவாம். இதனைத் தொல்காப்பியர்,

> "காமம் சான்ற கடைக்கோட் காலை
> ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
> **அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
> **சிறந்தது பயிற்றல்** இறந்ததன் பயனே"

என்கிறார் (1138) இறந்ததன் பயன்-வயது கடந்ததன் பயன்.

கணவனும் மனைவியும் தாங்கள் விரும்பிய வண்ணம் குடும்பக் கடமைகளைக் குறைவில்லாமல் செய்து முடித்துவிட்டனர்.

தங்களைத் தாங்களே காத்துக் கொள்ளவும், பெற்றோர்களாகிய தங்களை மீள் குழந்தை போல் பேணிக் கொள்ளவும் தக்கவர்கள் ஆகிவிட்டனர்.

தம்மைப்போல் கடமைகளை முடித்துவிட்ட முதியவர்களாகிய உறவினரும் தம்மோடு கூடியிருந்து தொண்டு செய்வதற்குத் தக்க துணையாகி விட்டனர்.

ஆதலால், அவர்களொடும் இணைந்து பொதுத் தொண்டும் உலகியல் தொண்டும் செய்தல் எம் பிறவிக் கடன் எனத் தேர்ந்து தெளிந்து முடிவு செய்துவிட்டனர். இது அவர்கள் மேற்கொண்ட **இல்லறத் துறவாம்**.

இல்லறத்தார் துறவராக வாழும்போது புதுப் பிறப்பினர் ஆகின்றனர். அனைவரையும் தம்மவராகக் கொள்கின்றனர். விருப்பு வெறுப்பு அற்ற நிலையர் ஆகின்றனர்.

மக்கள் அனைவரும் உயிர்கள் அனைத்தும் இன்பத்தை விரும்புகின்றன; துன்பத்தை வெறுக்கின்றன. அதனால், எவர்க்கும், எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாமை வேண்டும்.

தமக்குப் பிறர் துன்பம் செய்தாலும் தாங்கிக் கொண்டு அவர்க்குத் துன்பம் செய்யாமையே தவம், நோன்பு என்பதும் அது. மனவலிமை பெருகப் பெருகத் தம் துயர் தாங்கும் ஆற்றல் பெருகும். போன போக்கில் அறிவு போகவிடாது தடுக்கும்! ஆமை எப்படி ஐந்து உறுப்புகளையும் (தலையும் கால்களும்) அடக்கிக் கொள்கிறதோ அப்படியே ஐந்து பொறிகளையும் மனமாம் ஆறாம் பொறியாம் அகப் பொறியால் அடக்கிக் காப்பான்.

தீமை செய்தாரையும் வெறுக்கமாட்டான். தீமை செய்தார்க்கும் நன்மை செய்து அவன் தீமையை விட்டொழித்து நல்லது செய்யும் நலத்தன் ஆக்குவான். அவனுக்குள்ள தீய தன்மையாம் நோய் தீர்க்கும் மருத்துவனாக விளங்குவான். தான் செய்யும் தொண்டுக்கு அவன் துணையாளனாய் - பரப்பாளனாய் - விளங்க வைப்பான்.

வழிவழிக் குடும்ப வழக்கத்தால் 'புலால்' உண்டிருப்பான். புலால் என்பது விலங்குணவு; மாந்தர்க்குப் பொருந்தா உணவு. உணவு தான் உணர்வின் அடிப்படை! புலால் உணவு விலங்குணர்வை உண்டாக்கும். இலங்குணர்வை ஆக்காது. ஆதலால் புல்லுணவு (தாவர உணவு) கொள்ளல் கடனாகக் கொள்வான்.

மருத்துவர், "நீ புலால் உண்ணல் ஆகாது; கொழுப்பு மிகுதியால் உன் உயிர்க்கும் கேடாம்" என்று ஆணையிட்டு அதற்குப்பின் அவர் ஆணையைக் கடக்க முடியாமலும் நாவைக் கடக்க முடியாமலும் இரண்டும் கெட்டான் நிலையில் புலாலை உண்ணாமல் விடுவதனினும், தானே நிறுத்துவது தற்காப்பும் முற்காப்புமாம்.

ஆதலால், திருவள்ளுவர் அருளுடைமை, கொல்லாமை, புலால் மறுத்தல் என மூன்று அதிகாரங்கள் வைத்தார்.

மருந்து என்னும் அதிகாரத்திலும் "மாறுபாடு இல்லாத உணவை உண்டால் ஊறுபாடு இல்லை" என வலியுறுத்தினார்.

கொன்றால் தான் பாவம்; நாங்கள் கொலை செய்யவில்லையே என்பார் உளர்.

நீங்கள் புலால் உண்பதால் தானே அவர்கள் கொலை செய்து விற்கிறார்கள்! நீங்கள் உண்ண வருவதால் தானே புலவுக் கடை நடத்துகிறார்கள். நீங்கள் புலால் உண்ணுதலை நிறுத்துங்கள்! அவர்கள் தாமே கொலை செய்தலையும், புலவுக் கடை நடத்துதலையும் விட்டு விடுவார்கள்! என்கிறார் வள்ளுவர்.

கோயில் வழிபாட்டு நம்பிக்கையர், வெள்ளி, செவ்வாய் ஆகிய நாள்களில் புலவுண்பதில்லை. புலவு ஆக்கும் கலத்தில் சமைப்பதும் இல்லை! இரண்டு நாள் கட்டொழுங்காகக் கொள்வதை, ஏழு நாளுக்கும் கொண்டுவிட வேண்டியது தானே!

இரண்டு நாள் பொய் சொல்லக் கூடாது;

இரண்டு நாள் களவு செய்யக் கூடாது;

மற்றை நாளெல்லாம் எக்கேடும் செய்யலாமா?

பொய்யும் களவும் கொலையும் சட்டப்படி குற்றம்!

அருளாளர் தவத்தர் துறவர் அறவர் குருவர் முதுவர் தொண்டர் என உயர்நிலை அடைந்தார் எவராயினும் அவர்க்கெல்லாம் புலையும் கொலையும் தவிர்தல் விலக்கில்லா நோன்பாம்!

வள்ளலார் பெருமான் எழுப்பிய ஒளிவழிபாட்டு

நிலையத் தலைவாயில் எழுத்து – ஆணை – என்ன?

**"புலை கொலை தவிர்ந்தோர் புகுக"** என்பது புலாலை விட முடியாமல் கொல்லுவார் ஒரு பக்கம்! வேள்விப் பெயரால், தெய்வப் பெயரால் கொல்லுவார் ஒரு பக்கம்! கொலை, கொலை தானே! எதன்பேரால் – எப்பேரால் செய்தாலும் கொலை, கொல்லாமை ஆகிவிடுமோ? வள்ளுவம் சொல்கிறதே!

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று"

என்கிறதே! தெய்வ பெயரால், வேள்விப் பெயரால் கொன்றவற்றை மீள எழுப்பித் தர இயலுமா?

வாழும் உயிரினைவாங்கிவிடல் – இந்த
மண்ணில் எவர்க்கும் எளிதாகும்!
வீழும் உடலை எழுப்புதலோ – ஒரு
**வேந்தன் நினைக்கினும் ஆகாதையா?**
ஆட்டின் கழுத்தை அறுத்துப் பொசுக்கி – நீர்
ஆக்கிய யாகத்து **அவியுணவை**
ஈட்டும் கருணை **இறையவர்** – கைகளில்
**ஏந்திப் புசிப்பரோ** கூறுமையா?
மைந்தருள் **ஊமை மகனை** – ஒருமகன்
வாளால் அரிந்து கறிசமைத்தால்
தந்தையும் உண்டு களிப்பதுண்டோ? – இதைச்
சற்றுநீர் யோசித்துப் பாருமையா!

இவை **ஆசியசோதிப்** பாடல்கள். கவிமணி பாடியவை. பிம்பிசாரன் செய்த கொலைவேள்வியைத் தடுத்துப் புத்தர் கூறியவை! 'புத்த கயா' சென்ற நாங்கள் புலால் இல்லாக்கடை ஒன்றைத் தேடிக் கண்டு பிடிக்கப்பட்ட பாடு பெரும்பாடு! காலையில் அவித்த இட்டலி மாலை வரை ஆறி அலந்து போன வகையில் கிடைத்தது! சிங்கள வெறியன் இராசபட்சே, நரபலி விலங்காய் மாறிய ஒன்றே புத்த அழிவுச் சான்று இல்லையா!

இயல்பாகப் பிறக்கும் போதே பிறந்து நாம் இறக்கும் வரை அகலாமல் இருக்கும் 'பசித்தீ'க்கு விருந்தென்னும் வேள்வி செய்க என்றவர், அருளாளர் வள்ளுவர்.

"பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்" (88)

"இணைத்துணைத் தென்பதொன்றில்லை விருந்தின்
துணைத் துணை வேள்விப் பயன்" (87)

என்பவை விருந்தே வேள்வி என்னும் அருமைக் குறள்கள்.

"அது வேண்டும்! இது வேண்டும்!" என்று பார்த்த நிலைவேறு! இல்லறத் துறை சார்ந்தது அது. இல்லறத்துறவு நிலை வேறு! இப்பொழுது வேண்டா! வேண்டா! என்று ஒவ்வொன்றாகத் தள்ளும் நிலை.

வேண்டாமையே சிறந்த செல்வமாகக் கொள்ளும் நிலை. எவ்வெவற்றில் இருந்து வேண்டா என விடுதலை பெறுகிறோமோ அவ்வளவு வீடு பேற்று நிலை இது.

"ஆசைக்கோர் அளவில்லை" என்றார் தாயுமானார்.

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே"

என்ற திருமூலர்.

"ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள் " என்றார்!

கோயில்கள் இரண்டு உண்டு. ஒன்று 'நடமாடக் கோயில்; மற்றொன்று படமாடக் கோயில்!' நடமாடக் கோயில் தொண்டு ஒன்று செய்தால், படமாடக் கோயில் தொண்டு பலவாகும் என்றார்.

நடமாடக் கோயில் எது எனின்,

'ஊன் உடம்பு ஆலயம்'

என்று விளக்கமும் செய்தார் அவர்.

திருவள்ளுவரோ இன்னும் ஒருபடி மேலேறி, என் குடியை - என் சுற்றத்தை - என் இனத்தை - என் நாட்டை - ஏன் இவ்வுலகை உயர்த்துவேன் எனத் தொண்டு செய்தால், கோயிலுக்குள் இருக்கும் தெய்வமே தார்ப்பாச்சை கட்டிக் கொண்டு ஓடிவந்து உன் கையைப் பிடித்து முன்னே இழுத்துச் செல்லும் என்றார்.

அது,

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்"

என்பது மடிதற்று என்பது, உடையை வரிந்து கட்டிக் கொண்டு என்பது.

தேவையைச் சுருக்கினால் சேவைபெருகும்! தேவையைப் பெருக்கினால் எவ்வளவு தேடினாலும் போதாது என்னும் நிலையே இருக்கும்.

"எனக்குத் தேநீர் வேண்டா"
அக்கவலை இல்லை; அச்செலவும் இல்லை!

"எனக்கு வெற்றிலை பாக்கு வேண்டா"
அக்கவலை இல்லை; அச்செலவும் இல்லை!

இதனை,

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்" (341)

என்றார் வள்ளுவர்.

துறவியல் இறுதி அதிகாரம், அவாவறுத்தல்;

அதன் இறுதிக் குறள்.

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்" என்பது, (370)

உலகியக்கும் பேரா இயற்கை போல்,

அவாவற்றோனும் பேராஇயற்கைப் பெருநிலை எய்துவான்! அதுவே ஒடுக்கநிலை! 'ஒடுங்கி' என்பது மெய்கண்டார் மொழி! ஒடுக்கத்தின் மேல் இலங்கம் (இலிங்கம்) அமைத்து வழிபடலும், விழாக் கொள்ளலும் தமிழக வழக்கு!

தலைப்பை மீளப்பாருங்கள் 'இல்லறத்து உறவு' 'இல்லறத் துறவு' இரண்டும் இணைந்தது இல்லையா?

# 7. துறவும் தொண்டும்

ஒரு முதியர், ஊர் அறியோம்! பேர் அறியோம்! ஓர் ஊர்க்கு வருகிறார். ஊர்மடத்தில் தங்குகிறார். அவர் பார்வை அடுத்தே உள்ள ஊர்க் கிணற்றில் பட்டது.

ஊர்க் கிணறு; குடிநீர்க் கிணறு; சுற்றிலும் நின்று பெண்கள் நீர் இறைத்தனர்; குழந்தைப் பருவத்தரும் இறைத்தனர்.

கிணற்றைச் சூழவும் நீர்த்தேக்கம்! கட்டுக் கிடை; பாசி; சேறு; சக்தி; ஈ, கொசு இருக்கை; இவற்றின் மேல் நின்றுதான் நீர் இறைக்கின்றனர்.

முதியவர் எண்ணம் பளிச்சிட்டது. என்ன செய்யலாம் என எண்ணமிட்டார்! அவர் ஊரில்லை! அவர் உறவர் இல்லை! ஆனால், அவர் தொண்டர்.

மடத்தில் வழக்கம் போல் படுத்தும், சீட்டாடியும், அரட்டை அடித்தும், ஆடியும் பாடியும் பலர் இருந்தனர். முதியவர், இளைஞர் ஒருவரிடம் ஒரு **மண் வெட்டி கிடைக்குமா?** என்று கேட்டார்.

முதியவர் அயலூரார் அவர் மண்வெட்டி கேட்டதும் இளைஞர் 'எதற்கு' என்றார். "கிணற்றைச் சூழ்ந்து சேறும் சகதியுமாகக் கிடக்கிறது. சிறிது நிலத்தைத் தோண்டி நீரை வெளியேற்றினால் கிணற்றுப் பக்கம் தூய்மையாகும் என்று தான் கேட்டேன்" என்றார். நல்லவேளை! அந்த இளைஞர் மண்வெட்டி கொண்டு வந்தார்.

முதியவர் பார்வை கிணற்றுச் சூழலில் சென்றது. அங்கே பூச்செடிகள் சில நீரற்று வறண்டு போய்க் கிடந்தன. அவ்வூர்க் கோயில் நந்தவனம் அது. வேண்டும் இடத்தில் நீர் இல்லை. வேண்டா இடத்தில் நீர் கட்டிக் கிடக்கிறது. பத்துப் பதினைந்து அடி நீளம் ஓரடி அகலம் ஓரடியளவுப் பள்ளம் தோண்டினால் இரண்டு நிலங்களும் ஒருங்கே வாய்க்கும்.

கிணற்றில் இருந்து நந்தவனத்துப் பக்கமாய் மண்வெட்டியால் தோண்டத் தொடங்கினார். மண்வெட்டி கொண்டு வந்த இளைஞன், அவரிடத்திருந்து மண்வெட்டியை வாங்கினான். அவனொத்த இளைஞர்கள் அவன் செயலைப் பார்த்துத் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போய் மண்வெட்டி, கூடை, கடப்பாறை எனக் கொண்டு வந்தனர்.

முதியவர் வாய்க்காலுக்கு வரைகோடு போட்டுத் தந்தார். "சிற்றாள் வேலை எட்டாள் வேலை!" இரண்டு மணிப் பொழுதளவில் கிணற்றில் இருந்து நந்தவனத்திற்கு வாய்க்கால் அமைந்து தண்ணீர் வழியத் தொடங்கிவிட்டது. பள்ளமாய் வெட்டிப் போட்டு, மேட்டில் கிடந்த மண்ணைக் கூடையில் அள்ளிக் கிணற்றின் சுற்றுப்பள்ளத்தில் போட வழிகாட்டினார். பள்ளம் மண்ணால் நிரம்பியது. நந்தவனம் நீரால் நிரம்பியது. பக்கத்தே இரண்டு மூன்று பெரிய கற்கள் கிடந்தன. அவற்றை மூன்று நான்குபேர் கூடித் தூக்கிக் கொண்டு வரச்செய்து நீர் இறைப்பார் ஏறி நின்று எளிதில் நீர் இறைக்க வழி செய்தார்.

"எங்கிருந்தோ வந்த முதியவர் வந்த அன்றே இந்த வேலையை முடித்துவிட்டார். நாமும் உட்கார்கிறோம்; பொழுதுபோக்குகிறோம்; உறங்குகிறோம்; சீட்டாடுகிறோம்" என்று எண்ணத் தொடங்கினர். ஒருவர் வந்து, பெரியவரைப் பாராட்டினார்! மற்றவர்களும் சூழ்ந்தனர். ஊரையும் பேரையும் கேட்டனர்!

"ஊரைவிட்டுக் கிளம்பியவனுக்கு ஊரென்ன பேரென்ன! எல்லா ஊரும் அவன் ஊர்தான். எல்லாரும் உறவினர் தாம்" என்றார்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற **கணியன் பூங்குன்றன்** அச்சிற்றூரில் எல்லாரும் கண்டு மகிழும் வண்ணம் காட்சி தந்தான்!

ஊர்ப் பெரியவர் ஒருவர் செய்தி அறிந்தார். மடத்துக்கு வந்தார். பெரியவரை வணங்கி வீட்டுக்கு அழைத்துச் சென்றார். தம் வீட்டு விருந்தாளிபோல் உணவு தந்தார். பெரியவர் உண்டதும் புறப்பட்டார். இங்கே 'ஓய்வெடுக்கலாம்' என்றார். இல்லை நான் மடத்தில் தங்கிக் கொள்வேன் என்றார் முதியவர்.

மாலைப் பொழுது வந்தது. பள்ளிப் பிள்ளைகள் சிலர் வந்தனர். அவர்கள் படிப்பைப் பற்றிக் கேட்டார். அவர்கள் புத்தகங்களை எடுத்துக் கொண்டு வரச்சொன்னார். அவரவர்க்கு வேண்டும் பாடங்களைக் கற்பித்தார். அன்று முதல் பிள்ளைகளுக்கு வீட்டுப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர் ஆனார்.

இரவில் சில முதியவர்கள் மடத்திற்குப் படுக்க வந்தனர். சிற்றூர்ப் பழக்கம் அது. அப்படி வந்தவர்களோடு தாம் படித்த கதைகள், வரலாறுகள் ஆகியவற்றைக் கூறினார். படியாத சிலர்க்கு எழுத்து அறிவிக்கும் இறைவன் ஆனார். எழுத்துக் கற்பித்து, எழுத்தைக் கூட்டிப் படிக்க வைத்து அ, ஆ என்று சொல்லும்போதே

"அறம் செய விரும்பு"
"ஆறுவது சினம்"
"இயல்வது கரவேல்"

என ஆத்தி சூடியும்,

"அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்"
"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"
"இல்லறம் அல்லது நல்லறம் அன்று"

என்று கொன்றை வேந்தனும் சொல்லித்தந்தார். இப்படி **இரவுப் பள்ளி ஆசிரியர்** ஆனார். குழந்தைகள் பெரியவர்கள் அனைவர்க்கும் வேண்டும் மருத்துவம் செய்யவும் தொடங்கினார். **ஊரையே தத்து எடுத்துக் கொண்டது** போல் தொண்டராக விளங்கினார்.

ஊரோ **அவரைத் தத்து எடுத்துக் கொண்டது** போல் ஆயது. அவர் ஊருக்குத் **தாயுமானாராக** ஆயினார். ஊரவரோ அவருக்குப் பட்டினத்தாராக விளங்கினர். ஊரவரே முறை வைத்துக் கொண்டு அவருக்கு உணவு வழங்கினர். அவர் பிச்சைக்குச் செல்லவில்லை. ஊரவர்க்கு விருந்தாளாக வரிசை பிடித்து வந்து வழங்கினர்.

அவர் வருவதற்கு முன்னரும் அந்த மடத்தில் பிச்சைமுட்டி, அன்னக்காவடி என வந்தவர் உண்டு. அவர்கள் நிலை வேறு; ஊர் ஊர் மாறிச் சென்றனர். அனைவரும் ஊரில் கூடி அந்த ஊரைவிட்டுப் போக வேண்டா என வேண்டியதால் இவர் நிலையாகத் தங்கினார். **ஊர்க்காவல் தெய்வம், ஊர் ஆசிரியர், ஊர் மருத்துவர்** என விளங்கியவர் எவர்க்கும் இயல்பாக வந்தே தீரும் **இயற்கை அழைப்புக்கு** ஆட்பட்டார்.

ஊரே அழுதது! எல்லா வீடுகளும் தங்கள் குடும்பத்தில் ஒருவரைப் பறிகொடுத்து போல அலமந்தன. இதை ஈடு செய்ய எவர் வருவார். இவர் வந்தபின் ஊர்ச் சண்டடை குடும்பச் சண்டை – களவு என்பவை இல்லை. எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் இப்படிச் செய்வார் எவர் என ஏங்கினர்.

அன்று எவரும் ஊரைவிட்டு எதற்காகவும் போகவில்லை. ஊரே திரண்டு சுடுகாட்டுக்குத் தேர் கட்டிக் கொண்டு சென்றனர்.

ஊர் ஆண்கள் வீட்டுக்கு ஒருவராய் மொட்டை போட உட்கார்ந்தனர். ஊரில் முடி இறக்குவார் ஒருவரே இருந்தார். ஊரே வரிசையாக உட்கார்ந்தால் என்ன செய்வார்?

ஊர் **நாட்டாண்மை** எழுந்தார்! ஊரவரை மொத்தமாக வணங்கினார். இவர் ஒருவரால் இத்தனை பேர்க்கும் மொட்டை போட இயலாது. ஊரிலுள்ள அனைவர் சார்பாகவும் நான் மொட்டை போட்டுக் கொள்கிறேன் என அமர்ந்தார். அவ்வாறே நிகழ்ந்தது! பின்னர் எரியூட்டப்பட்டது.

இது இட்டுக்கட்டியது அன்று; புனைவும் அன்று! **திருவில்லிபுத்தூர்** பக்கம் நடந்த நிகழ்வு இது!

நெய்யாக உருகுவது நெய்ஞ்சம் – நெஞ்சம்!

உயிர்வேறு உயிர் இரக்கம் வேறு என இரண்டு இல்லை. இரக்கம் ஒருவின் (நீங்கின்) உயிர் ஒருவும் (நீங்கும்) என்பது வள்ளலாரியம்.

உயிர்தான் உயிர் இரக்கம் தான் **ஒன்றலாது இரண்டிலலை**

இரக்கம் ஒருவின் உயிர் ஒருவும் என்பது அது.

ஒரு பாலம்! அதன்மேல், ஓரத்தில் மிதியடி பழுதுபார்ப்பவர். அவர்க்கு ஒரு நேர்ச்சியில் கால் முடமாயது. செயற்கைக் கால்! தோள்பட்டை வரை உள்ள தாங்கு கம்பு!

பாலத்தின் அருகே ஒருவரை விரைந்து வந்த வண்டி ஒன்று அடித்துத் தள்ளிவிட்டுப் போய்விட்டது. கூட்டம் 'ஐயோ, ஐயோ' எனக் கூறியதை அன்றி, அவரைத் தூக்க எவரும் துணியவில்லை. தோல் தையலர் கம்பை எடுத்து ஊன்றிக் கொண்டு சென்று அவரைத் தூக்கிக் கொண்டு பக்கத்தில் இருந்த மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்.

கொண்டு வந்தவர் நிலையைப் பார்த்த மருத்துவர், எக்கட்டணமும் வாங்காமல் மருத்துவம் பார்த்தார். சரி செய்தும் விடுத்துவிட்டார். ஆயினும் நொண்டி நடக்கும் நிலையே இருந்தது.

சில மாதங்கள் சென்றன! தம்மால் மருத்துவம் செய்யப்பட்டவர் நொண்டுதலோடு கால் அடிபட்ட நாயொன்றைத் தூக்கிக் கொண்டு வந்தார். விலங்கு மருத்துவம் பார்ப்பவர் அல்லர். ஆயினும் மருத்துவர், கொண்டு வந்தவர் நல்ல குணம் கருதிப்பார்த்தார். கட்டுப் போட்டுக் காலைச் சரி செய்தார். மருத்துவர் தம் நாட்குறிப்பில் முன்னே ஒருவர் கால் அடிப்பட்ட வரைக் கொண்டு வந்ததும், அவர் கால் அடிபட்ட நாய் ஒன்றைக் கொண்டு வந்ததும் குறித்து வைத்தார். நாய் சில முறை கட்டியபின் சீருற்றது.

அடுத்த ஆண்டில், எந்த நாய் அடிபட்டு வந்து கட்டுப்போட்டு நலம் பெற்றதோ, அந்த நாய் அடிபட்ட இன்னொரு நாயை இழுத்துக் கொண்டு வந்தது.

மருத்துவர் வியந்தார்! வியப்பொடும் அழுதார். மருத்துவம் பார்த்தார். "என் அன்னை இயற்கை எய்திய நாளில் கூட இவ்வளவு வருந்திக் கண்ணீர் வடிக்கவில்லை. அப்படி என்னை உருக்கியது அந்த நாயின் செயல்" எனத் தம் குறிப்பேட்டில் எழுதினார். இது நிகழ்ந்தது பிரான்சு நாட்டிலேயாம்!

மக்கட் பண்பில் தலைப்பட்டது அன்புத் தாய் பெற்ற அருள் என்னும் குழந்தை. அதனால் **90 பங்கு மூளையரினும் 10 பங்கு நெஞ்சர் உயர்ந்தவராகப் போற்றப்படுவார்.**

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பு இல்லா தவர் "

என்றது வள்ளுவம் (997)

தொண்டுள்ளம் தூய உள்ளம்; நிறையுள்ளம்; இறையுள்ளம்;
தொண்டர் பெருமான் அப்பரடிகள்
"தொண்டலால் துணையும் இல்லை
ஐயன் ஐயாறனார்க்கே"

என்றார் என்பதை முன்னரே அறிவோம்.

## 8. உழைப்பும் உயர்வும்

காடு திருத்தி நாடாக்கத் தேவை ஏற்பட்ட நாள் உண்டு. முயல் பாய்ந்த இடம் கயல்பாய் கழனிபாய் ஏற்பட்ட நாள் உண்டு. அவை பாராட்டுக்குரிய செய்கைகளாகச் சான்றோர்களால் பாடப்பட்டக் கல்லில் எழுதப்பட்ட காலமும் உண்டு.

அந்நாள் தேவை அது! கட்டாயத் தேவையாகவும் இருந்தது அது. இந்நாளில் உழுவார் உழைப்பிடம் எல்லாம் அடுக்கு மாடிகள்! நீர்நிலைப் பகுதி எல்லாம் மனைமாளிகைகள்! உழவன் பயிர்செய் நிலங்கள் எல்லாம் தொழிற்சாலைகள்!

ஒரு பிடி (பெண்யானை) படியும் சீறிடம் (சிறிய இடம்) எழுகளிறு (ஏழு ஆண் யானை) உணவுக்கு ஆகும் அளவு விளையும் என்று பாராட்டப் பட்ட வயல்வெளிகள் எல்லாம்! முட்கருவேல்கள், மழைக்காளான் என முளைக்கும் பள்ளிகள் - தொழிலகங்கள் - கல்லூரிகள்!

உழவன் நிலங்கள் பறிமுதல்; அவன், வந்த காசில் குடித்துக் குடித்துக் குடியைக் கெடுத்தல்; 100 நாள் வேலை, 200 நாள் வேலை என உழையாமல் - உருப்படியான வேலை செய்யாமல் சுரண்டிய கொள்ளை போக விரும்பும் தொகை வழங்கல் - உழைப்பைக் கெடுத்து இலவயப் பொருளுக்குக் காத்துக்கிடத்தல் - இவை குடியரசு கோலோச்சும் வகை - ஏன்? வாக்குப் பொறுக்கி, மீள மீள ஆட்சிக்கு வர!

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி"
"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்"
"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்."

முன்னது ஒழிந்தது! பின்னது கோலோச்சினாலும் அதனைக் குற்றம் கூறக் கூடாது! ஏன் அரசே செய்கிறது ஆதலால்,

"இரவார் இரப்பார்க்கு ஒன்றீவார் கரப்பிலாது
கைசெய்தூண் மாலை யவர்" என்பது குறள் (1035)

"உழைப்பை வழி வழியாகக் கொண்ட பெருமக்கள் எவரிடமும் எதையும் இரந்து வேண்டாமாட்டார். இரப்பவர் எவரேனும் வந்தால் ஈயத் தவறமாட்டார்" என்பது இதன் பொருள்!

இப்பொழுது இரப்பவர் வரிசையில் நிற்பவர் உழவர் – ஏன்?
அவனுக்கு வேண்டும் உதவி இல்லை!
வேண்டா இலவசமும், அவ்விலவசத்திற்கு
வேண்டும் பொருள் குவிக்க அரசே மதுக்கடை நடத்துதலும்
குடிக்கப் பழகியவன் குடியைவிடான்!
"குடி, குடியைக் கெடுக்கும்; குடி நாட்டைக்
கெடுக்கும்" என மதுக்கடை நுழைவாயிலில்
எழுதிப் போட்டு என்ன பயன்?
குடிக்கக் கடையை மூடாமல், குடிக்கும்குடி
வகைகளை ஆக்கும் ஆலைகளை மூடாமல் –
எழுதிப் போட்டால், எழுதச் செய்த அரசு
கல்வியில்லா அரசா? கடையைத் திறப்பவர்
கல்வியில்லாதவரா? இதுகேடு என்று
எழுதிப் போட்டுக்கேட்டுக்கு அழைத்துத்
தொடர்ந்து குடிமக்களைச் சீரழிக்கும் அரசு –
நெஞ்சமுடைய அரசா? வஞ்சமுடைய அரசா?

சாதிக்கட்சிகள் பெருகி உள்ளன. சாதிக்க வாய்த்தும் சாதிக்காமல், "நாங்கள் வந்தால் குடியை ஒழிப்போம்" என நாற்காலியைப் பிடிக்கப் பேசும் அரசும் கட்சியும் உண்டு! அவர்களுக்கு,

"எங்கள் கட்சியில் இருப்பவர் குடிப்பவராக இருக்கக் கூடாது என்றும், "குடிப்பது கண்டால் உறுப்பாண்மைஇழப்பர்" என்றும் கூற வாய்திறக்குமா? வாய்திறந்தால் உங்கள் கட்சிகளில் எவர் உறுப்பினராக இருப்பர்? முதலில் உங்கள் குடும்பத்தில் உற்றார் உறவில் மதுக்குடியாமல் இருக்க வகை காண்பீர்களா?

அதைச் செய்யுங்கள் முதலில்! மற்றை வகையில் நாடு தானே குடியை ஒழிக்கும்!

குடியை ஒழிக்க முயன்ற **அமைச்சர்,** கோயிலில் தமிழ்வழிபாடும், தமிழில் குடமுழுக்கும்நடத்த முயன்ற **அமைச்சர்,**

"அயலார் இடப்பறி செய்யாமல் - குடியுரிமைகொள்ளாமல் காசுமீர்ச்சட்டம் போல் தமிழ்நாட்டுக்கும் கொண்டு வருக" என்ற அமைச்சர் உடனே ஒழிக்கப்பட்ட **அரசுகளின் போலிமை நாடறியாச் செய்திகளா?**

தொலைக்காட்சி போலப் பண்பைச் சீரழிக்கும் ஒன்று உண்டா? பெண்கள் முதியவர்கள் குழந்தைகள் கடமைகளையெல்லாம் எளிதாக ஒழித்து, சிந்தனையற்றுச் சீரழிந்து கிடக்க வைக்கும் இவ்வலங்கோலக் காட்சிப் பெட்டிகளை இலவசமாகத் தந்து கெடுக்க வேண்டுமா? குப்பைகளை வீட்டுள் வாரிக் கொட்ட வேண்டுமா? போலியான பெட்டி – அரசுக் கொடை விளம்பரம் – தூக்கி எறிந்துவிட்டுக் கடையேறிப் புதிது வாங்க வைக்கும் ஊடுகொள்ளை வேண்டுமா?

'அம்மா' என்று தடுக்கிக் கீழே விழுந்த போதும் தண்டிக்கும் மழலையர் பள்ளி முதல் வானளாவ எழுந்து நிற்கும் **கல்விக் கொள்ளைக் கூடங்கள் இறையாண்மைஅரசின் சான்றா?**

அரசு செய்ய வேண்டும் **இலவயங்கள் மூன்றே:**

1. கல்வி இலவசம்

2. மருத்துவம் இலவசம்

3. தொழில் தருதல் கட்டாயம்

**ஒழிக்க வேண்டியவை மூன்று :**

1. தொலைக்காட்சி ஒழிப்பு

2. மதுவொழிப்பு

3. தேர்தலுக்கு மூன்று திங்களுக்கு முன்னரே ஆட்சியைக் கலைத்து, இந்தியத் தலைவர் மாநில ஆளுநர் ஆட்சியாக்கல். இவற்றைச் செய்வன **இறையாண்மை அரசும் செங்கோல் அரசுமாம்?**

பசித்துயர் – நோய் – பிணி, பிறக்கும் போதே வந்தது! அத்துயர் நீக்க இலவசமும் பிச்சையும் வழங்கல், நிரந்தரப் பிரச்சைக்காரர் ஆக்கி, நாட்டையே பிச்சைக்கார நாடாக்குவதாம்.

வறியார்க்கு – பசித்தவர்க்கு – உதவல் அறமே! ஆனால், அதனைப் போக்க அவர்களே தேடிக் கொள்ள வழி செய்வதே மானமிக்கவர் – மான மிக்க மக்களாக வாழச் செய்வார் கடமை என்பது வள்ளுவம்.

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்; அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்" (225)

என்பது அது.

வாய்ப்புடையோரும் அரசு செய்ய வேண்டிய கடன், 'அவர் இவர்' எனப்பாராமல் வறுமைப் பட்டவர் எவராயினும் அவர் பசியை உடனே தீர்த்தலும், அப்பசியை அவர்கள் உழைப்பாலேயே தீர்த்துக் கொள்ளச் செய்தலும் வேண்டும். இதில் முதல் உதவி போல்வது முன்னது; பின்னது தாமே தீர்த்துக் கொள்ளும் மருத்துவம் போல்வது என்பது பொருளாம்.

"எக்கேடு செய்தாலும், எவர் செய்தாலும் என் உழைப்பே உழைப்பு என் வேலையே வேலை - எவர் பாராட்டையும் எதிர்பாரேன் - எவர் பரிசையும் எதிர்பாரேன்" என உழைக்கும் உழவர், தொழிலர், அலுவலர் நிலை என்ன?

உழவர்க்கு வேண்டும் பொருள் எதற்கும் விற்பவர் வைத்த விலையே விலை!

உழவர் தம் உண்டாக்கப் பொருளுக்கு அப்படி விலை வைக்க முடியுமா?

அரசு விதிக்கும் விலை - வணிகத் தரகர் வைக்கும் விலை! உழவரே விலை வைக்க முடியுமா?

விளையும் பருவத்தில் வாங்கிக் குவித்து அருந்தற் காலத்தில் மும்மடங்கு நான்மடங்கு விலை ஏற்றி விற்று, வணிகர் பொருளைக் குவிக்கலாம்! உழவனுக்கு அந்த வாய்ப்பு உண்டா? அவன் வணிகத் தரகரிடம் முன் பணமாகப் பெற்ற தொகைக்கு, அவர் வைத்த விலைக்குக் களத்திலேயே - தோப்பிலேயே - தோட்டத்திலேயே -கொடுத்து விட்டுத்தானே எஞ்சியிருந்தால் வீட்டுக்குக் கொண்டு வரமுடியும்? அவன் தொடர்ந்து உழுவானா? நிலத்தை விற்றுவிட்டுக் கூலிக்குப்போய் விடமாட்டானா?

துணிக்கு விலை வணிகர் வைத்ததுதான்! பருத்திக்கு விலை உழவன் வைக்கமுடியுமா?

அழுகும் பொருளை உண்டாக்குபவன், அன்றே கிடைத்த விலைக்குத் தானே விற்றாக வேண்டும்.

பெரும் பெரும் தொழிற்சாலைகள் பண முதலைகள் பன்னூறு இடங்களில் தொடங்க 'உழவர் நிலம்' தாம் தந்த விலை! எந்த வீட்டுக்கு மின்

இல்லை என்றாலும், அத்தொழிலர்க்குத் தடையில்லா இலவய அல்லது எளிய விலை மின்! வரிவிலக்கு ஏற்றுமதி இறக்குமதி வாய்ப்பு!

மக்களுக்கு வழங்கும் உயரிய பரிசு, ஆற்று நீர் குளத்து நீர் ஆயவற்றைச் சாக்கடை யாக்கல்! காற்றை மாசாக்கல்! மாசுடைய கழிவுகளையும் வேதிமங்களையும், உயிர் கொல்லிகளையும் ஆக்கும் **செல்வக் கொழுப்பர்களைக் கூட்டிக் கூட்டிக் கொண்டாடி வரவேற்றல் இதற்காக நாடு நாடாக அலையும் நடுவண் அரசு கூடிக் கூடிக் கூட்டும் மாநில அரசு.**

நம் மாநிலக் காட்டுக்கும் எல்லை வரம்பு திட்டமாக இல்லை! நாட்டுக்கும் எல்லை வரம்பு திட்டமாக இல்லை! "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" எல்லா மாநிலங்களும் எடுத்துக் கொண்டு விட்ட எச்சம் மட்டுமே நம் நாடும், காடும், அதற்கும் எல்லை இல்லாமையால் அழிவுகள்! தண்ணீர்ச் சிக்கல்கள்! வழக்கு வம்புகள்!

இருந்த **கச்சத்தீவை** இழந்தது. இழந்த நாள் வாங்கிய காவு முதல் இதுவரை கணக்கிட முடியுமா?

திருப்பதிக்கு அப்பால்தான் வேற்றுமொழி நாடு எனச் சங்க இலக்கியம் **26 இடங்களில் முழங்குகிறது!** திருத்தணியே போராடிப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டதானால், திருப்பதியை என்ன சொல்வது? சென்னையை விழுங்கவும் வாயைத் திறந்த முதலை அல்லவா ஆந்திரம்!

அமெரிக்க நாட்டின் தலைவன் ஒருவனைப் பெற்ற தாயிடம், "உங்கள் பெருமை அளப்பரியது என்றாள் ஒருத்தி! "உங்கள் மகன் நாட்டின் தலைவர்" என்ற எண்ணத்தில் சொன்னாள்! "ஆம்! அவனினும் பேறு பெற்ற இன்னொரு மகன் எனக்குள்ளான்! **அதோ பார் உழுது கொண்டுள்ளான்"** என்றாள்!

உலகத் தலைமைநோக்கி நிற்கும் அந்நாட்டின் தலைவனினும் உயர்ந்தவன் உழவன் என்பது அத்தாயின் கணிப்பு.

இங்கே ஓர் உழவன்; புகழ்வாய்ந்த கொடையாளன் **ஏகம்பவாணன்** என்பது அவன் பெயர். அவன் மனைவியிடம் சோழ வேந்தன்.

"வாணன், முடி நடப் போயினரா?"

என எள்ளலாகக் கேட்டானாம்! "ஆம் வேந்தே! உங்கள் முடி நடப் போயினார்" என்றாளாம். வேந்தன் முடியினும் மேம்பட்டது உழவன் நாற்றுமுடி என்பது பொருளாம்.

இராமனுக்கு முடி சூட்டாம்! கம்பன் பாடுகிறான்! **அயோத்தி இராமனுக்குத் திருவழுந்தூர்க் கம்பன்,**

"சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி,
வசிட்டனே புனைந்தான் மௌலி" என மௌலியாவது - திருமுடி! **சடையன், சடையப்பர்.**

இராமாயணம் பாடிய கம்பனை எவரும் அறிவர். ஆனால், ஏர்த் தொழில் பற்றியெழுதிய **ஏர் எழுபதையும், திருக்கை வழக்கத்தையும்** படித்தவருள்ளும் பலரும் அறியார்.

★ உழவன் முடிநடவில்லையானால்,
அரசின்முடி என்ன செய்யும்?

★ உழவன் ஏர்க் களம் படுத்தால்,
அரசன் போர்க்களம் படுக்காமல் என்ன செய்யும்?

★ உழவன் ஏர்க்கோலும் தார்க்கோலும் எடுக்க வில்லையானால் அரசன் செங்கோல் என்னாம்?

★ உழவன் கோட்டை நிரம்பவில்லையானால் அரசன் கோட்டையில் என்ன இருக்கும்?

★ ஒருவன் ஓதுகிறானாம் (நான்முகன்) ;

ஒருவன் உறங்குகிறானாம் (திருமால்);

ஒருவன் கூத்தாடுகிறானாம் (சிவன்);

"உழவன் இருக்கிறான் உலகத்தைப் பார்த்துக் கொள்ள என்பதால் தான்" என்கிறார். திருக்கை என்றால் உழவன் கையே திருக்கை! திருவினை ஆக்கும் கை!

உழவனை அன்றே பெருமைமிகப் பாடியவர் திருவள்ளுவர்! உழவு என்பதோர் அதிகாரம்! அவன் நிலத்தை உழுவதற்குச் சுழல்வதால் தான் உலகம் இடரில்லாமல் சுழல்கிறது என்கிறார்.

வீட்டுக்கு வாராமல் கண்டபடி திரியும் கணவனை மனைவி வெறுப்பாளா மாட்டாளா?

காலை மாலை இரவு என்று உழவன் பயிரைப் பாராமல் இருந்தால் நிலம் என்னும் மகள் அவ்வுழவனை வெறுப்பாள்! அவள்! நகைக்கவும் செய்வாள்!

"உனக்கு வேண்டுவன எல்லாவற்றையும் நான் தருவதற்கு வைத்திருந்தும் பாடுபட்டு எடுத்து கொள்ளாச் சோம்பேறி நீ" என்று நகைப்பாளாம்.

நிலக்கிழார்! பெரு நிலக்கிழார்! என்னும் சிறப்பு பெயர்கள் இன்றும் மறையாமல் இருப்பதை அறிக. கிழவன் - தலைவன்; உரிமையாளன்; கணவன்.

குடி செயல்வகை (103), உழவு (104), நல்குரவு (வறுமை) (105) இரவு (106) இரவச்சம் (107) இவற்றின் இறுதியில் கயமை (108) என்பதை வள்ளுவர் வரிசைப்படுத்திய அருமையை நோக்குக!

சட்டங்களை வகுத்த அரசு, தன்குடிகள் பிச்சை எடுத்தும் வாழவேண்டும் என்னும் இழிமையை உண்டாக்கும் அரசாக இருக்குமானால், அவ்வரசு ஒழியட்டும் என்று கொதிப்புடன் எழுதுகிறார் வள்ளுவர்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து

கெடுக **உலகியற்றி யான்**"

என்பது அது (1062)

**இயற்றும்** கடன் உடையது அரசு என்பதை,

"**இயற்றலும்** ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்றது கொண்டு தெளிக (385)

உழவையும் உழவுக்கு உதவும் தொழில்களையும் பெருக்கினால் அல்லாமல்,

"நாடென்ப நாடா வளத்தன"

என்னும் உயர்வை நாடு அடையாது! இரப்பையும் களவையும் கயமையையும் ஒழிக்க வழி உழவுக்கு தொழிலுக்கும் உதவுதலே யாம்.

# 9. முன்னை ஊராட்சி முறை

ஊர் + ஆட்சி = ஊராட்சி

நன்செய் புன்செய் சாலை முதலியவற்றினும் உயரமான இடத்தில் அமைக்கப்பட்டது **ஊர்.** உயர்ந்த ஊர் பள்ளம் குழி, வளை, பொந்து, புடை ஆகியவற்றில் இருந்து மேலே ஊர்ந்து வருவது ஊரி எனப்பட்டது. உயரமாக ஏறிச் செல்ல அமைந்தது ஊர்தி.

"வலவன் ஏவா **வான ஊர்தி**" என்பது புறநானூறு (27)

ஊர் என்றாலே **'உறையூர்'** எனப்பட்டது. ஊர்தோறும் ஆட்சி செய்ய அவைகள் (சபைகள்) இருந்தன.

உறையூர் அவையம் 'அறங்கூறு அவையம்' எனப்பட்டது.

பூவானி (பவானி) என்னும் ஊர்ப் பக்கமுள்ள ஒரு மலைப்பகுதி, **'ஊராட்சிக் கோட்டை'** என வழங்கப்படுகிறது.

ஊர் என்னும் சொல் தொல்காப்பியத்தில் இடம்பெறும் பழந்தமிழ்ச் சொல் **'ஊரும் பேரும்'** என்பது ஊர்பற்றிய அரிய ஆய்வு நூல்.

கேரளம், கருநாடகம், ஆந்திரம் மட்டுமன்றி வடநாட்டிலும், மேல்நாடுகள் அனைத்திலும் இடம் பெற்ற சொல். ஊர் என்பது. முன்னரே, ஊர் காப்பாளர் என்பார் இருந்தனர்.

"நூல்வழிப் பிழையா நுணங்குநுண் தேர்ச்சி

**ஊர்காப் பாளர்**

என்பது சங்க நூலாம் மதுரைக் காஞ்சி (646-647) **ஊர் தண்டல்** என்பது ஊர்களில் வரிவாங்குதல் அந்தந்த ஊர்களில் உள்ள நிலத்தின் தரத்திற்கு ஏற்றவாறு வரி வாங்குதல் **ஊர்தரப்படி** எனப்பட்டது.

**குடவோலை முறை**

மக்களாட்சியில் வாக்குச் சீட்டுகளைப் பெட்டியில் இடுவது போல், சோழர் ஆட்சிக் காலத்தில் குடவோலை முறை இருந்தது. வாக்களிக்கத் தக்கார் ஊர் மன்றத்தில் கூடி, அவரவர் விருப்பின்படி தேர்ந்தெடுக்கத் தக்கார் பெயரை எழுதி,

எழுதிய ஓலைச் சீட்டைக் குடத்துள் போட்டுக் குலுக்கிச் சிறுவன் ஒருவனைக் கொண்டு சீட்டை எடுத்துத் தேர்வு செய்தமுறை இது.

இக்கால மக்களாட்சி முறைத் தேர்தலுக்கு முன்னோடியாக இருந்த அம்முறையை அறிதல் வேண்டத் தக்கதாகும். இச்செய்தி, செங்கற்பட்டு மாவட்டம், **உத்திரமேரூரில்** உள்ள இரண்டு கல்வெட்டுகளால் அறியப்படுகின்றது. **முதல் இராசராசன்** காலத்தவை இக்கல்வெட்டுகள்.

**உறுப்பினராவதற்கு அமைந்த தகுதி**

1. கால்காணி நிலத்துக்குமேல் அரைக்காணி நிலமுடையவன்.
2. தனக்கு உரிமையுடைய மனையில் அமைந்த இல்லத்தில் வாழ்பவன்.
3. முப்பத்து ஐந்து வயதிற்கு மேல் எழுபத்து ஐந்து வயதிற்கு உட்பட்டவன்.
4. வேதசாத்திரம் அறிந்த பிராம்மணம் வல்லவன்.
5. வேதாகமவிருத்திகளை ஓதுவிக்கும் பயிற்சியுடையவன்.
6. அரைக்கால் காணி நிலம் உடையவன் ஆயினும், நாலு பாசியத்திலும் ஒரு பாசியம் முழுமையாக அறிந்தவன்.
7. நிர்வாகச் செயல் திறம் உடையவன்.
8. ஒழுக்கமும் ஆசாரமும் உடையவன்.
9. பழியற்ற வழியில் பொருள் ஈட்டிய தூய்மையும் மனத்தூய்மையும் உடையவன்.
10. மூவாண்டிற்குள் கிராமசபை வாரிய உறுப்பினராக இல்லாதவன்.

இத்தகைய தகுதிகளைக் குறைவின்றிப் பெற்ற பெருமக்களையே குடும்பு மக்கள் தேர்ந்து அவர்களின் பெயர்களைத் தனித்தனி ஓலைகளில் எழுதி அவ்வோலைகளைக் குடத்தினுள் இடுவர். 'குடும்பு' என்பது, இக்காலத்தில் 'வட்டம்', 'தொகுதி' என்பவை போல்வது.

**உறுப்பினராகத் தகுதியற்றவர்**

1. ஊர்ச்சபையில் அமைந்த வாரியங்களில் முன்னர் இருந்து கணக்குக் காட்டாது பிழைத்தவர்.
2. தேர்தலில் நிற்பவரின் சிற்றன்னை பெரிய தாய் ஆகியோரின் மக்கள், அத்தை மாமன் மக்கள், தாயோடு உடன்பிறந்தார், இவர்களுக்கும் தனக்கும் பிள்ளை கொடுத்த மாமன், இவர்கள் மனைவியொடு உடன்

பிறந்தாளை மணந்தவர், உடன் பிறந்தாள் மக்கள், தன்மருமகன், தன் தகப்பன், தன்மகன் ஆகிய உறவின் முறையார்கள்.

3. தான் என்ற அகம்பாவத்திலும், பெரிய பழிக்குற்றத்திலும் முன்னார்ச் செய்த **'மகாபாதகம்'** என்ற கிராமக் குற்றப்பதிவில் பெயர் எழுதப்பட்டவர்.
4. சிற்றின்பத்தில் கெட்டவர்க்குப் பிராயசித்தம் செய்யும் ஆளாக உள்ளவர்.
5. பிடிவாத குணம் பெற்றிருப்பவர்
6. பிறர் பொருளைக் கைப்பற்றி வாழ்பவர்
7. கையூட்டுப் (இலஞ்சம்) பெற்றவர்
8. முன்பு பரத்தையர் கூட்டுறவால் தூய்மையற்றவராக இருந்து, நெய்யால் சத்தியம் செய்யப் பெறும் பிராமண பிராயசித்தம்செய்து கொண்டவர்.
9. பழிகள் பல செய்து அவற்றிற்குக் கழுவாயாகப் பிராயசித்தம் செய்து கொண்டவர்.
10. கிராமதுரோகியாய் இருந்து தண்டனை செலுத்தி பிராயசித்தம் பெற்றவர்.

ஆக இத்தகைய குற்றங்களுக்கு உட்பட்டாரை நீக்கிவிட்டு, தகுதியுடைய பெயர்களை மட்டும் குடும்பு மக்கள் குறித்துக் குடம்புக விடுவர்.

**பொது மக்கள் சபை**

உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குக் குறிப்பிட்ட நாளில், மகாசபைக்குரிய பொதுமக்களாகிய ஊரிலுள்ள இளையர் முதல் முதியோர் வரை சபை நிரம்ப உட்புகக் கொண்டு அன்று உள்ளூரில் இருந்த நம்பிமார் ஒருவரையும் ஒழியாமே மகாசபையிலே உள்மண்டபத்திலே இருத்திக் கொண்டு, சபையின் நடுவே, ஓலைக் கட்டுகள் இட்ட குடத்தினை வைப்பர். அது போது, அரசனின் ஆணைபெற்ற அதிகாரி ஒருவர் அச்சபைக்கு வந்திருந்து தேர்தலை முறையாக நிகழ்த்தி வைப்பார்.

நம்பிமாரில் முதியராய் இருப்பார் ஒருவர், குடும்புகளின் ஓலைக் கட்டுகள் போடப்பட்டிருந்த குடங்களில் ஒன்றினை எல்லா மக்களும் காணும் வகையாக, இருகைகளாலும் மேல்நோக்கி எடுத்துக் கொண்டு நிற்பார். அதுபோது, பகற்போதிலேயே வினாத் தெரியாத பாலன் ஒருவனைக் கொண்டு, அக்குடத்தில் இருந்து ஒரு குடும்பிற்குரிய ஓலைக் கட்டை எடுப்பித்து, அதனை அவிழ்த்து, வேறொரு குடத்தில் இட்டுக் குலுக்கி, அக்குடத்தில் ஓர் ஓலையை அப்பாலனைக் கொண்டே எடுக்கச் செய்து, அவ்வோலையை ஊர்க்கணக்கன் மத்தியத்தன் கையில் கொடுப்பர். அக்குடத்து ஓலையை மத்தியத்தன்

வாங்கும்போது ஐந்து விரலாலும் அகல வைத்து, உள்ளங்கையிலே ஏற்றுக் கொள்வான்.

சபையில் உள்ள யாவரும் கேட்குமாறு மத்தியத்தன் வாசித்த அவ்வோலையை, அம்மண்டபத்தே இருந்த நம்பியர் எல்லோரும் வாங்கி வாசிப்பாரகள்.

வாசிக்கப்பட்ட அப்பெயர் கிராமசபை உறுப்பினர் பட்டியலில் தீட்டப் பெறும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப் பெற்றவர். அக்குடும்பிற்குரிய முறையில் நிறைவேற்றும் கழகத்தின் உறுப்பினராக இடம் பெறுவர்.

**மகாசபையில் வாரிய அமைப்பு**

இவ்வாறு முப்பது குடும்பிலும் குடும்பிற்கு ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பது பேரிலும், முன்னர்த் தோட்ட வாரியமும் ஏரிவாரியமும் செய்து அனுபவப் பட்டாரையும், கல்வி கேள்விகளில் சிறந்த முதியவர்களையும், வயதாலும் அனுபவத்தாலும் மிக்காரையும் கொண்டு சம்வத்சரவாரியம் (நீதிவிசாரணைக்குழு) அமைத்துக் கொள்வார்கள். இவ்வாரியத்தில் பன்னிருவர் இடம் பெறுவர்.

மிக்கு நின்றாருள் பன்னிருவரைத் தோட்ட வாரியமாக ஆக்கிக் கொள்வர். எஞ்சிநின்ற அறுவரையும் ஏரிவாரியமாகக் கொள்வார்கள். இவ்விரண்டு தரத்து வாரியங்களும், அவை செயல்படுவதற்குரிய பணியாளரையும், தொழிலாளரையும் அற்றை நாளே கூட்டிக் கொள்வர்.

**பதவிக் காலமும் நீக்கமும்**

இவ்வாறாக அமைந்து, வாரியம் செய்கின்ற மூன்று திறத்து வாரியப் பெருமக்களும் முந்நூற்று அறுபது நாளும் நிரம்பப் பணி செய்து (ஓராண்டின் இறுதியில்) விலகுவர்.

வாரியம் செய்யும் உறுப்பினருள் ஒருவர் தவறு செய்வாராயின் அப்பொழுதே அவரை வாரியத்தில் இருந்து நீக்கி விசாரணை செய்து தண்டனையோ அபராதமோ அளித்து, கிராமக் குற்றப் பதிவிலும் அவரது பெயரைப் பதிவு செய்வர்.

இவ்வாறான வரையறைகளுடன் குடவோலைத் தேர்வு முறைகள் சோழர் ஆட்சியில் நிகழ்ந்துள்ளன என்பதை, உத்தரமேரூர்க் கல்வெட்டு விளக்கமாப் புலப்படுத்துகின்றது.

தஞ்சை மாவட்டம், திருச்சேய்நல்லூரில் உள்ள கல்வெட்டொன்று ஊர்ச்சபையார் நடந்து கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றி விரிவாகக் கூறுகின்றது.

**பிற வாரியங்கள்**

இவ்வாறாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பது பேரைக் கொண்டு சம்வத்சர வாரியம், தோட்ட வாரியம், ஏரிவாரியம் ஆகிய தலைமையான வாரியங்கள் அமைத்துக் கொள்வர். பின்னர், மேற்குறித்த முப்பது குடும்புகளில் இருந்து எஞ்சிநின்ற ஓலைக் கட்டுகளை முறையே குடவோலை வாயிலாக மீண்டும் பன்னிரண்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பெறுவர். அவர்களுள் அறுவர் பஞ்சவார வாரியராகவும், அறுவர் பொன் வாரியராகவும் இருப்பர்.

இவ்வாறே கிராமத்தின் வளர்ச்சிக்கும் தேவைகளுக்கும் ஏற்ப, **கழனி வாரியம், கணக்கு வாரியம், கலிங்கு வாரியம், தடிவழிவாரியம், குடும்பு வாரியம், நகரவாரியம்** என்ற வாரியங்களும் முறையே வாரியத்துக்கு அறுவராக உறுப்பினர். அமைக்கப் பெறுதல் வழக்காகும். சில வாரியங்கள் நால்வரைக் கொண்டதாகவும் அமைந்திருந்தனைக் கல்வெட்டுக்களால் அறிய முடிகின்றது. (கல்வெட்டுக் கலைச் சொல் அகராதி

சோழர் காலத்திற்கு முன்னரே அவையங்கள் இருந்தமை தொல்பழநூல்களால் அறியப்படுகின்றன.

"எட்டுவகை நுதலிய அவையம்"

என்பது **தொல்காப்பியம்** (1022)

"மறங்கெழு சோழர் உறந்தை (உறையூர்) அவையம் (புறம் 39)
அறங்கெழு நல் அவை உறந்தை" - அகம் 93

குடவோலை முறை இருந்தமை,

"கயிறுபிணிக் **குழிசியோலை** கொண்மார்
பொறிகண்டழிக்கும் ஆவணமாக்கள்" - அகம்-77

இவற்றால் பழைய அவையம், வாரியம், குடவோலை முறை சோழர் காலத்தில் விரிவடைந்தன எனலாம். குடியரசு ஏற்பட்டபின் நடைபெறும் தேர்தல்களை ஒப்பிட்டுக் கண்டு, உண்மைஉணர இப்பகுதி வாய்க்கும். சோழர் கால வாரியங்களிலேயே வேதியம் கோலோச்சியமைநோக்கித் தெளிக. அன்று மூடிய கண்ணை இன்றுவரை திறந்ததா தமிழினம்?

## 10. ஊராட்சி அலுவலர் கடமை

**அலுவல்** என்பது "அலுப்பு அற்ற வேலை" என்னும் பொருளில் பொது மக்களால் வழங்கப்பட்ட சொல்.

உடல் அலுப்பு இல்லாமல் – வெயிலில் இருந்து வியர்வை சொட்டாமல் – காற்றாடிக் கீழிலிருந்து செய்யும் மதிப்பு மிக்க வேலை என மக்களால் கொள்ளப்படுகிறது.

எந்த வேலையும் பெருமையோ சிறுமையோ தருவதில்லை. அந்த வேலையை எந்த வகையில் செம்மையாகச் செய்ய வேண்டும் வகையால் ஒருவர் செய்கிறாரோ அந்த வேலையே சிறந்த வேலை. வேலை வேலையையோ செய்பவரையோ பொறுத்ததில்லை வேலை! அதனைச் செய்யும் செம்மையிலேயே பெருமையும் சிறுமையும் உள்ளது என்பதால்,

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்" (550)

என்றும்,

சிறப்பொவ்வா, செய்தொழில்
வேற்றுமையால் (972)

என்றும் **வள்ளுவர்** கூறினார்.

"வையகம் காப்பவ ரேனும் – சிறு
வாழைப் பழக்கடை வைப்பவ ரேனும்
பொய்யக லத்தொழில் செய்தே – புவி
போற்றிட வாழ்பவர் மேலோர்"

என்றார் **பாரதியார்.**

மேலதிகாரிகளைக் காட்டிலும், அவர்க்குக் கீழ்ப் பணிசெய்யும் அலவலர் பெருமைமிக்கவராகவும் போற்றுதலுக்கு உரியவராகவும் விளங்குவதை ஒவ்வொருவரும் அறியவே செய்வர்.

அவ்வாறே ஊரலுவலர் பெருமையும், ஊரிலும், வட்டத்திலும் மாவட்டத்திலும் சிறந்து விளங்குதல் உண்டு. இன்னும் சொன்னால், கையூட்டு

கரவு இல்லாத கிராமஅலுவலர்க்கு, அவற்றைக் கொண்ட அதிகாரிகளே தலையிடாமல் ஒதுங்குவதுண்டு என்பதை இதைப் படிப்பவர் அனைவரும் அறிவர்! மேல் பதவியர் தம் கீழ்ப்பதவியரிடம் தலையிடாமல் ஏன் ஒதுங்குகிறார்? அவர் மனச்சான்று ஒதுங்க வைத்து விடுகிறது! மனச்சான்று இல்லாமல் மரத்துப்போனவர் என்றால், கடுப்பாகி, அவரைச் சிக்கல் மிக்க இடத்துக்கு மாற்றித் தம் கடுப்பைத் தீர்த்துக் கொள்ளலாம். ஆனால், அச்செயலால் மேலும் பழியே கொள்வார் என்பது வெளிப்படை.

ஊரவர் எவரும் விரும்பி வரவும், தாம் சொல்ல வேண்டியவற்றைத் தயக்கம் அச்சம் இல்லாமல் சொல்லவும் இடம் தரும் கனிவு உடையவராகவும், அதே பொழுதில் பணிந்து வந்து பழிவழிக்கு இழுப்பார்க்குக் காரணம் காட்டி ஒதுக்கும் கடமையும் கண்டிப்பும் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

நம் கிராம அலுவலர் நேர்மையான முறையான எதனையும் ஏற்பார்; நேர்மையற்ற முறையற்ற எச்செயலையும் செய்யமாட்டார்; எந்த எதிர் பார்ப்பும், எவர் பரிந்துரையும் அவர்க்கு வேண்டியதில்லை. செய்யத்தக்கதெனின், தள்ளிப் போடாமல் உடனே செய்துவிடுவார் என்ற நம்பிக்கை ஊரவர்க்கு ஏற்பட்டுவிட்டால் அதுவே ஊரைச் செம்மைப்படுத்திவிடும்; ஊடு தரகரையும் ஒழித்துவிடும்! மேலதிகாரிகளையும் விழிப்புறுத்திவிடும்!

ஊராட்சிப் பொறுப்பு ஏற்றவர் முதலாவதாக ஊரைப் படிக்க வேண்டும். ஊரின் எல்லை; ஊர் மக்கள் கணக்கு; வீடுகள் எண்ணிக்கை ஊரிலுள்ள நேர்மையாளர்; குற்றம் செய்தலில் குறியானவர்; வம்பு வழக்குகளில் ஈடுபடுபவர்; குற்றத் தண்டம் சிறை எனப் பெற்றவர் பற்றிய செய்திகளை நெஞ்ச ஏட்டில் வாய்க்கும் போதெல்லாம் பதிவு செய்து கொண்டிருக்க வேண்டும்.

பணிக்குப் போனவுடன் தம்மை வரவேற்பார், மாலையிடுவார், நம்பிக்கைக்குரியவர் என்றோ, தம் அலுவலகத்திருப்பார் சொல்லெல்லாம் மெய்யான சொல் என்றோ கொண்டு விடாமல் "கண்ணாரக் கண்டதும் பொய், காதாரக் கேட்டதும் பொய், தீர ஆய்வதே மெய்" என்பது போல் தெளிவு செய்த பின்னரே முடிவு எதனையும் எடுக்க வேண்டும்.

மெய்யர் எனினும் பொய்யர் எனினும்
மெலியர் எனினும் வலியர் எனினும்

தம் நிலையில் ஒப்பக்கேட்டு, கண்டிப்பானதையும் கனிவாகவும் துணிவாகவும் கூறும் பக்குவநிலையராக விளங்க வேண்டும். ஏனெனில், அந்த ஊரில் அவர்களோடு அவர்களாக வாழ வேண்டும் பதவியராக இருப்பதால் அத்தன்மைஅவர்க்கும் அவர் வேலைக்கும் பாதுகாப்பான காவற்கோட்டையாக இருக்கும்.

ஊரில் நடக்கும் விழா, நலம், பொலம் ஆயவற்றில் 'அவர் இவர் அவ்விடம் இவ்விடம்' எனப் பாராமல் தலைகாட்டி, இரண்டு சொல் சொல்லிவிட்டு வருவதை மேற்கொண்டால் அவரை ஊரே கொண்டாடத் தவறாது.

இயன்ற அளவால் கற்கும் இளைஞர்க்கு நல்ல வழிகாட்டியாகவும், வேண்டும் சான்று, காலத்தால் வழங்குபவராகவும் இருந்தால் அவர்கள் ஆக்கமான துணையாகவும் தொண்டராகவும் அமைந்துவிடுவர்.

அரசு தரும், உறுப்புக் குறைஞர், முதியர், கைம்மையர் முதலோர்க்கான உதவிகளைச் சுணக்கமில்லாமல் பெற்று உதவுதலால், உயர்ந்த தொண்டு செய்த பயனும் கிட்டும்.

மேலிடத்து அதிகாரிகளின் கட்டளைகளைக் காலம் தவறாமல் செம்மையாக முடித்தத் தருதலால் நல்ல நம்பிக்கை ஏற்படும். ஆளும் கட்சி, ஆளத்துடிக்கும் கட்சி, சாதிக் கட்சி என்பவற்றில் எந்தச் சார்பும் காட்டா திருத்தல் வேண்டும். தம்பணி அரசுப் பணியே அல்லாமல் கட்சிப்பணி அன்று. எந்த ஒன்றன் சார்பும், எடுபிடித் தன்மையும் கொண்டால் ஊரில் ஒரு பகுதியர் வெறுப்பைப் தேடாமல் தப்பமுடியாது. இருக்கவே இருக்கிறது மொட்டைக் கடிதம்! எச்சரிக்கைக் கடிதம்! மனம் நோக வைக்கும் மேல்விளைவு இவற்றை முன்னரே எண்ணி விழிப்பாகச் செயல்பட்டு அவர் பகைக்கும் ஆளாகாமல், சட்டத்தைக் காக்கும் காவலராகவே விளங்க வேண்டும்!

பணியில் தூயராகவும் செம்மையராகவும் சார்பு அற்றவராகவும் இருந்தால் அவரை ஆளும் கட்சியரும் புரிந்து கொண்டு வேண்டா அழுத்தம் தரமாட்டார்.

ஊர் அலுவலர் அனைவரும் கூடும் கூட்டத்தில் அவர்கள் ஊர் பற்றிய பதிவாவணம் ஒன்று வைத்தால் அவரவர்கள் ஊர்களில் உள்ள மன்றங்கள், சங்கங்கள், ஊர்க்குப் பெருமைசெய்யும் தொண்டர்கள், பெருமைக்குரிய பெரியவர்கள், விளையாட்டு வீரர்கள், தொழில் தேர்ச்சியர் ஆயோர் பற்றிய வரலாற்றுப் பதிவுகளைச் செய்தால் வட்டம், மாவட்டம், மாநிலமெனத் தொகுக்கும் வரலாற்றுத் தொகுதியாகச் சிறக்கும். சில பழமையான ஊர்களில்

உள்ள கோயில்கள், நினைவுச் சின்னங்கள், கல்வெட்டுகள், புதை பொருள்கள், மக்கள் செவி வழிச் செய்திகள் என்பவற்றைத் தொகுத்துத் தந்தால், ஊராட்சி, நாட்டாட்சி செய்யும் பேறாகச் சிறக்கும்.

ஊர்ப் புறம்போக்கு இடங்கள், பொது இடங்கள், இவற்றைப் பறிபோகாமல் – எவரும் பட்டாப் போட்டுத் தமக்காக்கிக் கொள்ளாமல், விற்றுக் கொள்ளையடித்து விடாமல் விழிப்பாகத் தம்முடைமையைக் காப்பதுபோல் காக்கவும் வேண்டும்.

காவல்துறை, தீயணைப்புத் துறை, முதலுதவி என்பவற்றொடு தொடர்பு கொள்ளத் தக்க வகையில் கடமைபுரிதல் பேரிழப்புகளைத் தவிர்க்கும்.

ஊராளும் வேலை உயரிய வேலையாக மதிக்கப்பட அவர் கடமையுணர்வும் கறையில்லா வாழ்வுமே உதவும்!

அப்படிப்பட்ட தகவாளர் முறைப்படி இடம் மாறிப்போனாலும், பதவி ஓய்வு பெற்றாலும் ஊரவர் நெஞ்சில் மாறா இடம் பெற்ற பெருமையராக விளங்குவார். அவர்க்குப் பின்னே பதவிக்கு வருவார்க்கும் அவர் போட்டு வைத்த நல்வழிச் சாலை அவரைப் போலவும், அவர்க்கு மேலாகவும் நடையிட உதவும் (இவற்றுள் சில முன்னர் எழுதப்பட்டாலும் செய்தி நலம் கருதி மீளவும் வந்ததாம்) **தொண்டைமான் இளந்திரையன்** ஆட்சி பற்றி அவன் பட்டறிவை அருமையாக வெளிப்படுத்தியுள்ளான். அவனும் தொண்டை நாட்டு அரசனாக இருந்தவன். அவன்,

“சக்கரத்தையும் பாரச் சட்டத்தையும் இணைத்து உலகில் இயக்கும் அரசு என்னும் வண்டியைச் செலுத்துவோன், பெருமைஉள்ளவன் எனின், இடையூறு இல்லாமல் வழிச் செலவு நன்றாய் அமையும். அதனைச் செலுத்துபவன் தெளிவு இல்லாதவன் என்றால் நாள்தோறும் பகை என்னும் சேற்றில் பட்டுப் பலப்பல தீமைகளை மேன்மேலும் ஆக்கும்” என்கிறான்.

“கால்பார் கோத்து ஞாலத்து இயக்கும்
காவற் சாகாடு உகைப்போன் மாணின்
ஊறு இன்றாகி ஆறுஇனிது படுமே;
உய்த்தல் தேற்றான் ஆயின் வைகலும்
பகைக்கூழ் அள்ளல்பட்டு
மிகப்பல தீநோய் தலைத்தலைத் தருமே”

என்பது அது. (புறநானூறு -185)

(கால் - சக்கரம்; ஞாலம் - உலகம்; சாகாடு - வண்டி; மாணின் - பெருமையுடையவன் என்றால்; ஆறு - வழி; உய்த்தல் - செலுத்துதல்; வைகலும் – நாள்தோறும்; அள்ளல் – சேறு; தலைத்தலை – மேல்மேலும்)

**ஊராட்சியின் பெருத்த அளவே நாட்டாட்சி!**

**ஊராட்சியே வீட்டாட்சியின் வழிகாட்டி!**

வாழிய நலனே! வாழிய நிலனே!

